# ஆரம்பக்கல்வி




ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் மாத இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டுச் சந்தா ரூ. 5] [தனி இதழ் 50 ந. பை.

| மலர் 33 | மே 1969 | இதழ் 5 |
|---|---|---|

# அடக்கம் நிறைந்த அறிவுலக மேதை

இந்தியத் திருநாடு, தன் ஒளி மிகுந்த வழிகாட்டி ஒருவரை இழந்து விட்டது.

இந்த நாட்டு அரசாங்கங்கள், தங்களுடைய தன்னிகரற்ற தலைவர் பெருந்தகையை இழந்துவிட்டன.

கல்வி உலகம், அதன் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வந்த அறிவுலக மேதையை இழந்து விட்டது.

எழுத்தாளர் அரங்கம், பெரியவர்களுக்கு ஏற்ற நூல்களையும் சிறியவர்களுக்கு ஏற்ற நூல்களையும் அழகழகாக எழுதி அணி அணியாக அளித்து வந்த எழுத்து வேந்தர் ஒரு வரை இழந்து விட்டது.

ஆசிரியப் பெருமக்கள், மிகச் சாதாரண ஆசிரியர் என்ற நிலையிலிருந்து மிக உயர்ந்த ஜனாதிபதி என்ற பதவியையும் பெற முடியும் என்

னும் சீரிய உண்மைக்கு உரிய சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்த செம்மனச் செம்மலை இழந்துவிட்டனர்.

பொது வாழ்வு, தூய்மையும் வாய்மையும் நேர்மையும் நிறைந்த ஓர் ஒப்பற்ற தொண்டு உள்ளத்தை இழந்துவிட்டது.

தேசிய ஒருமைப்பாடு என்னும் குறிக்கோள், அந்தக் குறிக்கோளை, வெறும் சொற்களாலும் எழுத்துக்களாலும் அல்ல, தன் வாழ்வாலும் செயலாலும் நன்கினிது பரப்பி வந்த நல்லறிஞர் ஒருவரை இழந்து விட்டது.

ஆம் ! சென்ற இரண்டு ஆண்டுகளாக, இந்தியாவின் குடியரசுத் தலைவர் என்னும் மிக உயர்ந்த பதவியை மிகச் சிறந்த முறையில் வகித்து வந்த பேரறிஞர் பெருந்தகை டாக்டர் ஜாகிர் உசேன் அவர்கள் இயற்கை எய்திவிட்டார்.

டாக்டர் அவர்கள், அன்பின் திரு உருவாக விளங்கினார்கள் ; அறிவின் கருவூலமாகத் திகழ்ந்தார்கள் ; ஆற்றலின் பிறப்பிடமாகப் பொலிந்தார்கள் ; அடக்கத்தின் சின்னமாக வாழ்ந்தார்கள் ; உயர்ந்த பண்புகள் அத்தனையும் ஒன்று திரண்டு ஓர் உரு எடுத்தாற் போல் நடமாடினார்கள்.

இத்தகைய பண்பின் செல்வரைத்தான் இந்தியப் பெருநாடு இழந்துவிட்டது, இம் ‘ மே ’ திங்கள் மூன்றாம் நாள்.

மிகச் சிறந்த அறிவாற்றல் பெற்றவர்கள் பலரை இந்த உலகம் பலமுறை கண்டிருக்கிறது. மிக உயர்ந்த பண்பாடு படைத்தவர்கள் பலரையும் இந்த உலகம் எத்தனையோ முறை பெற்றுப் பூரித்திருக்கிறது. ஆனால் மிகச் சிறந்த அறிவாற்றல் படைத்தவர்களிற் பெரும்பாலோர் மிக உயர்ந்த பண்பாடு உடையவர்களாக விளங்குவதில்லை. அது போலவே மிக உயர்ந்த பண்பாடு உடையவர்களிற் பெரும்பாலோர் மிகச் சிறந்த அறிவாற்றல் பெற்றவர்களாகத் திகழ்வதில்லை. மிகக் கூரிய அறிவுத் திறனையும் மிகச் சீரிய பண்பாட்டுப் பொலிவையும் ஒருங்கே பெற்றுத் திகழ்பவர்கள், மிகச் சிலராகவே, மிக அருமையாகவே, அத்திபூத்தாற்போல என்கிறார்களே, அப்படித்தான் தோன்றுகின்றனர். அன்பின் திருஉரு ஏசுநாதர் போல், பகுத்தறிவு வீரர் புத்த பெருமான் போல், கருணையின் வடிவம் மகாவீரர் போல், இலட்சிய வாழ்வினர் காந்தியடிகள் போல், அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் போல்,

மிக அபூர்வமாகத் தோன்றுகிற—அறிவும் பண்பும் ஒருங்கே இணைந்த அதிசய மனிதர்களில் ஒருவர் டாக்டர் ஜாகிர் உசேன். எனவே தான் அப்பெருந்தகையாளரின் இறப்பு, இந்திய மக்கள் அனைவரையும் வேதனை வெள்ளத்தில் ஆழ்த்தி விட்டிருக்கிறது.

எந்தச் சூழ்நிலையில் அந்த அன்புப் பெருமகன் இறந்திருந்தாலும் ஏற்பட்டிருக்கக் கூடிய இப் பெருந் துயரம், சற்றேனும் எதிர்பாரா வகையில், திடீரென்று ஏற்பட்ட தாக்குதல் போல் நேரிட்டுவிட்ட காரணத்தால், மேலும் பல மடங்காகப் பெருகி விட்டது.

1969 ஆம் ஆண்டு மே திங்கள் மூன்றும் நாள் சனிக்கிழமை, எல்லா நாட்களையும் போலத்தான் புலர்ந்தது. ஆனால் அந்த நாள் முடிவதற்குள்ளாக, டாக்டர் அவர்களுடைய பொன்னான வாழ்வு முடிந்து விட்டது என்னும் கொடிய செய்தி இந்திய மக்கள் அனைவருடைய செவிகளிலும் பாய்ந்து, அவர்களுடைய நெஞ்சங்களை நிலைகுலையச் செய்துவிட்டது.

பல நாட்களாக நோயால் தாக்குண்டு படுத்திருந்தார்—மரணம் என்னும் மாபாவி கொஞ்சம் கொஞ்சமாக அவரை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தான்—எந்த நேரத்திலும் இறப்பு அவரை இறுகத் தழுவிக் கொள்ளக் கூடும் என்றெல்லாம் நிலைமை இருந்திருந்து, பின்னர் அவர் மறைந்திருந்தால், துயரம், ஓரளவு தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். ஆனால் டாக்டர் அவர்களுடைய மறைவோ, யாரும் துளியளவும் எதிர்பாராத நிலையில், எங்கிருந்தோ வந்து தாக்கிய அம்பு போல இந்தியாவின் இதயத்தைத் துளைத்துவிட்டது.

1920 ஆண்டு அக்டோபர் மாதம் பன்னிரண்டாம் நாள், அலிகார் நகரில் உள்ள மகமதிய ஆங்கில ஓரியண்டல் கல்லூரி மண்டபம். ஆசிரியர்களும் மாணவர்களும் ஏராளமாகக் குழுமியுள்ள ஒரு கூட்டம். இந்திய விடுதலைப் போராட்டத்தின் வீரத் தளபதிகளாக அக் காலத்தில் விளங்கிய மௌலானா மகமதலி, மௌலானா ஷௌகர் அலி ஆகிய உடன் பிறந்தார் இருவரும், தன் இரு புறங்களிலும், தன்பால் நேசத்தையும் பாசத்தையும் பொழிந்தபடி வீற்றிருக்க, பெருந்தலைவர் காந்தியடிகள் வீர உரை ஆற்றுகிறார். அறநெறி வழுவாமல், ஆனால் உறுதி துளியும் குறையாமல் வெள்ளையர் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராட வேண்டியது எத்துணை இன்றியமையாதது என்பதையும், பிரிட்டிஷ் ஆட்சியின் உதவி பெற்று நடத்தப்படும் கல்வி நிலையங்களை

உடனே புறக்கணித்துவிட்டு மாணவர்கள் வெளியே வர வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதையும் காந்தியடிகள், தமக்கே உரிய இனிய எளிய தூய முறையில் விளக்கிக் கொண்டிருக்கிறார்.

அந்த வீரவுரை—அந்த உரையிலே காணப்படுகிற நாட்டுப் பற்று—அந்த நாட்டுப் பற்றைத் தழுவிக் கொண்டிருக்கிற சீரிய பண்பு ஆகிய இவையெல்லாம், அந்த உரையைக் கேட்டுக்கொண்டிருந்த நூற்றுக் கணக்கான மாணவர்களில் ஒருவர் உள்ளத்தை மிகவும் கவர்ந்து விட்டன. ஆம்—அண்ணல் காந்தி கூறுவது முற்றிலும் நியாயம் தான் என்று தனக்குத்தானே இயம்பிக் கொண்டது அந்த நெஞ்சம். இயம்பியதோடு நின்றதா அந்த நெஞ்சம்? அன்றிலிருந்து பதினேழாம் நாள், தன்போன்ற கருத்துடைய பல மாணவர்களையும் ஆசிரியர்களையும் இணைத்துக் கொண்டு அந்தக் கல்லூரியை விட்டே வெளியே வந்துவிட்டது.

1920 ஆம் ஆண்டு அக்டோபர் 29ஆம் நாள் இவ்வாறு அக்கல்லூரியைவிட்டு வெளியேறிய எம். ஏ. வகுப்பு மாணவர்தான் டாக்டர் ஜாகிர் உசேன். இருபத்து மூன்று வயதுதான் அவருக்கு அப்போது. ஆனால் இணையற்ற நாட்டுப் பற்று அவருடைய இதயத்தைத் தன் இருப்பிடமாக மாற்றிக் கொண்டு விட்ட காரணத்தால் இவ்வளவு துணிச்சலான நடவடிக்கையை அவரால் எடுக்க முடிந்தது.

இளமைத் துடிப்பு மிகுந்த வயதுதான் அது என்ற போதிலும்; வெறும் இலட்சிய வெறிக்கு மட்டும் ஆளாகித் தன் வாழ்க்கையை வீணாக்கிக் கொள்ளவில்லை அவர். அந்த இலட்சிய கீதத்திற்கு நடைமுறை உருவம் கொடுத்தார். கல்லூரியிலிருந்து வெளியேறிய தன் நண்பர்களின் துணையுடன், வெள்ளையர் கல்வி முறையிலிருந்து மாறுபட்ட—தேசியக் கல்வி முறை ஒன்றை உருவாக்கிப் பரப்புவதற்காக, **ஜமியா மிலியா இஸ்லாமியா** என்னும் பெயர் படைத்த இஸ்லாமிய தேசியப் பல்கலைக்கழகம் ஒன்றை உடனே நிறுவினார்.

இரண்டாண்டுகள் அக்கல்வி நிலையத்தில் பொருளியல் விரிவுரையாளராகப் பணியாற்றிய பின்—அதே நேரத்தில் பொருளியல் துறையில் எம். ஏ. பட்டத்தையும் பெற்று முடித்த அவர், மேற்படிப்புக்காக ஜெர்மானிய நாட்டைச் சேர்ந்த பெர்லின் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். மூன்றாண்டுகள் ஜெர்மனியில் தங்கி, பொருளியலில் டாக்டர் பட்டத்தைப் பெற்று, வேறு சில ஐரோப்பிய நாடுகளில் பிற துறைகள்

சிலவற்றிலும் அறிவையும் திறனையும் பெருக்கிக் கொண்டு, அந்த அறிஞர் பெருமகனார் தாயகம் திரும்பிய போது, அவர் விரும்பியிருந்தால் மிகப் பெரிய அரசாங்கப் பதவியை ஏற்றிருக்கலாம்; பொன்னும் பொருளும் நிறைந்த இன்ப வாழ்வை அடைந்திருக்கலாம்—ஆனால் அந்த இலட்சிய இளைஞரோ, எழிலும் சுவையும் நிறைந்த அத்தகைய இன்பபுரிப் பயணத்தைத் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டு, வறுமையும் துயரமும் நிறைந்த—ஆனால் தன் இதயத்தை இன்பத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டவல்ல தியாக வாழ்வை மேற்கொண்டார். மேல் நாட்டுக்குச் சென்று, மிக உயர்ந்த டாக்டர் பட்டம் பெற்று, பெயரோடும் புகழோடும் திரும்பியிருந்தும் அத் திருமகனார் தன்னால் உருவாக்கப்பட்ட ஜமியா மிலியாவின் துணைவேந்தர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, அந்தக் கல்வி நிலையத்தை அரும்பாடுபட்டு வளர்ப்பதையே தனக்குரிய பாதையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

வெள்ளைக்கார ஏகாதிபத்தியத்தின், இரும்புப் பிடியில் நாடு சிக்குண்டு தத்தளித்த காலத்தில், அரசாங்கத்தின் பொருளுதவி ஏதும் இன்றி, அதன் எல்லையற்ற தொல்லைகளையும் சமாளித்தபடி ஒரு பல்கலைக் கழகத்தை நடத்துவது என்பது எவ்வளவு துயரமும் வேதனையும் நிறைந்த ஒரு மாபெரும் பொறுப்பு என்பதை நாம் எடுத்துக் கூறத் தேவையில்லை. ஆனால் அத்தகைய பொறுப்பைத்தான் டாக்டர் ஜாகிர் உசேன் விரும்பி ஏற்றுக் கொண்டார். ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல, ஏறத்தாழ இருபத்தி இரண்டு ஆண்டுகள், ஓயாமல் உழைத்து உழைத்து அந்தக் கல்வி நிலையத்தை சிறப்பும் செல்வாக்கும் செழிப்பும் நிறைந்த ஒரு மாபெரும் அமைப்பாக ஓங்கி உயரச் செய்துவிட்டார்.

1925ஆம் ஆண்டில் காந்தியடிகளின் ஆய்வுரைப்படி அலிகாரிலிருந்து புது டில்லியின் புறநகர்ப் பகுதிக்கு மாற்றப்பட்ட இப் பல்கலைக் கழகம், இக் காலத்தில், யமுனை ஆற்றங்கரையில், ஏறத்தாழ எழுநூறு ஏக்கர் நிலப் பரப்பில், மிக அழகிய கட்டடங்களையும், கண்ணுக்கினிய தோட்டங்களையும், எழில் கொழிக்கும் புல் தரைகளையும், வானளாவிய புகழையும் பெற்றுத் திகழ்கிறது. இப் பெருமை முழுவதும் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களின் அயராத உழைப்பின் அருமையான விளைவு என்பதை அறியாதார் யார்? தியாக உள்ளமும் தூய தொண்டும் உயர்ந்த அறிவும் ஒன்றாக இணைந்தால் எவ்வளவு சிறந்த விளைவுகளை உருவாக்கிக் காட்ட முடியும் என்பதற்கு ஜமியா மிலியா ஓர் ஒப்பற்ற எடுத்துக் காட்டு.

செய்தொழிலை மையமாகக் கொண்ட ஆதாரக் கல்வித் திட்டத்தைக் காந்தியடிகள் இந்தியாவுக்கு வழங்கியபோது, அத்திட்டத்திற்குத் தெளிவும் சிறப்பும் மிகுந்த ஒரு செயல் உருவத்தைக் கொடுத்த பெருமை, டாக்டர் அவர்களின் தனி உரிமை. ஆதாரக் கல்வியைப் பரப்புகிற கல்விச் சாலைகள் வெறும் தொழில் பட்டறைகளாகவும், அங்குக் கல்வி பயில்கிற மாணவர்கள் வெறும் தொழிலாளர்களாவும் மாறிவிடக் கூடிய ஆபத்திலிருந்து ஆதாரக் கல்வியைக் காப்பாற்றி, புத்தகக் கல்வியையும் செய்முறைக் கல்வியையும் தக்க முறையில் இணைத்து ஒரு புதிய கல்வி முறையை உருவாக்கி, அப்படி உருவாக்கிய தன் மூலம் இந்திய நாட்டுக் கல்வித் துறைக்கு இணையற்ற தொண்டு புரிந்திருப்பவர் டாக்டர் அவர்கள்.

இந்தியத் துணைக்கண்டம் விடுதலைபெற்ற பின்னர், அப்போதுஇந்தியப்பேரரசின் கல்வி அமைச்சராகத் திகழ்ந்த மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்களின் அன்புக் கட்டளைக்கு இணங்க, அப்பெருமகனார், அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நான்கு ஆண்டுகள் அப்பணியைத் திறம்பட ஆற்றினார்.

அரசியல் துறையைவிடக் கல்வித் துறையின் வாயிலாகத்தான் நாட்டிற்கு உண்மையான மறுமலர்ச்சியை உருவாக்க முடியும் என்னும் கொள்கையின் அடிப்படையில், கிட்டத்தட்ட முப்பதாண்டுகள், கல்வித் துறையின் எழுச்சிக்காகவும் ஏற்றத்திற்காகவும் நற்பணி ஆற்றி வந்த அந் நல்லாசிரியரை, 1952 ஆம் ஆண்டில், அப்போதிருந்த—குடியரசுத் தலைவர், இந்தியப் பாராளுமன்ற மேலவையின் ஓர் உறுப்பினராக நியமித்தார். இலக்கியம், அறிவியல், நுண்கலை, சமூதாயத் தொண்டு முதலிய துறைகளில் சிறப்புப் பணியாற்றிய பெருமக்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள மேலவை இடங்களில் ஒன்றிற்கு இவ்வாறு நியமிக்கப்பட்ட டாக்டர் உசேன், அதுமுதல், அரசியல் துறையில் படிப்படியாக உயர்வும் பெருமையும் பெறலானார்.

1952ல் பாராளுமன்ற மேலவை உறுப்பினராக நியமனம்.

1956ல் மீண்டும் அப்பதவிக்கு நியமனம்.

1957ல் பீகார் மாநிலக் கவர்னராக அமர்த்தப்படுதல்.

1962ல் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுதல்.

1967ல் குடியரசுத் தலைவர் என்னும் பெரும் பொறுப்பில் அமர்த்தப்படுதல்.

இவ்வாறாக ஆண்டுக்கு ஆண்டு புதுப்புது உயர்வுகளும் பெருமைகளும் அவரை நாடி வரலாயின. ஆம்! அந்தப் பெருமைகளும் பதவிகளும் தாமாக அவரை நாடி வந்தனவே தவிர அவராக ஒருநாளும் அவற்றைத் தேடிச் சென்றதில்லை.

ஆண்டுக்கு ஆண்டு, அவருடைய புகழ் பெருகியது; பெயர் ஓங்கியது; பதவி உயர்ந்தது; நிலை சிறந்தது. ஆனால் அதே சமயத்தில் பிறர் பலரைப் போல் செருக்கும் சிறுக்கும் தோன்றவில்லை அவரிடம். அவருடைய நிலை உயர உயர, அவருடைய இயல்புப் பண்பாகிய அடக்கவுணர்வுதான் மேலும் மேலும் வளரலாயிற்று.

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம், மலையினும் மாணப் பெரிது" என்று தெள்ளு தமிழால் இயம்பினாரே வள்ளுவப் பெருந்தகையார், அந்த ஒளி மிகுந்த இலக்கணத்திற்குரிய எழில் மிகுந்த இலக்கியமாகத் திகழ்ந்தது டாக்டர் அவர்களின் வாழ்க்கை.

குழந்தைகளுக்காகப் பல புனை பெயர்களில் ஏராளமான சிறுகதைகளை எழுதியுள்ள டாக்டர் அவர்கள், பெரியவர்களையும் மறந்துவிடவில்லை! பொருளியல் பற்றிய சிறந்த ஆங்கில நூல்களை உருதுமொழியில் பெயர்த்து அமைத்துள்ளார் என்பதும், பேரறிஞர் பிளேட்டோவின் 'குடியரசு' என்னும் பெரு நூலையும் அவ்வாறே மொழிபெயர்த்துள்ளார் என்பதும், 'இந்தியாவில் கல்வித்துறைச் சீரமைப்பு' என்னும் சீரிய நூல் உட்பட பல அரிய நூல்களை இயற்றியுள்ளார் என்பதும், எண்ணி எண்ணி மகிழ்வதற்குரிய செய்திகளாகும்.

இனிய பேச்சாளராய், சுவை மிகுந்த எழுத்தாளராய், அயராது பணியாற்றிய ஆசிரியராய், அடக்கம் நிறைந்த பாராளுமன்றத்தவராய், அனைவர் இதயங்களையும் கவர்ந்த குடியரசுத் தலைவராய், விழுமிய பண்புகளின் உயரிய உறைவிடமாய்த் திகழ்ந்த உத்தம வழிகாட்டி இறந்துவிட்டார். ஆனால் அவர் வாழ்ந்து காட்டிய அந்த உத்தம வழி—அது என்றென்றும் இறவாது; மறையாது.

# கண்ணியத்தின் உருவம்—
# கடமையின் சின்னம்.

பேரறிஞர் அண்ணா அவர்களைப் பறிகொடுத்ததால் தமிழகத்தில் பொங்கிப் பெருகிய வேதனை வெள்ளம் இன்னும் வடியவில்லை. அதற்குள்ளாக மற்றொரு பேரிடியைத் தாங்கித் தீரவேண்டிய கொடுமை, தமிழகத்திற்கு ஏற்பட்டுவிட்டது.

கடமையின் சின்னமாய், கண்ணியத்தின் உருவமாய், கட்டுப்பாட்டின் சிகரமாய் விளங்கிவந்த அமைச்சர் கோவிந்தசாமி அவர்களைக் காலக் கள்ளன் களவாடிச் சென்றுவிட்டான்.

வெந்த புண்ணிலே வேல் செருகப்படுவது போல, பட்ட காலிலேயே மீண்டும் படுவதுபோல, அறிஞர் பெருமகன் அண்ணாவின் மறைவால் நொந்துகிடக்கும் தமிழகத்தின் நெஞ்சத்திற்கு மற்றொரு தாக்குதல் நேரிட்டுவிட்டது.

அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் இருபத்தி ஆறு மாதங்கள் அமைச்சராக இருந்திருக்கிறார். ஆனால் இந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக விரிவான புகழை அவரது தூய தொண்டு அவருக்குப் பெற்றளித்துவிட்டது.

1967ல் அறிஞர் அண்ணா அவர்கள், அவரால் அமைக்கப்பட்ட அமைச்சரவையில், பெருந்தகையாளர் கோவிந்தசாமிக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் என்னும் பொறுப்பை அளித்தார்கள். பேரறிஞரின் மறைவுக்குப் பின்னர் கலைஞர் கருணாநிதி அவர்களால் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் வேளாண்மை, உணவு ஆகிய இரு துறைகளும் அன்பர் கோவிந்தசாமியிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த இரு துறைகளிலும் அமைச்சர் கோவிந்தசாமி, ஓய்வு ஒழிவு இன்றி, அலுப்பு சலிப்பு இன்றி, கொஞ்சம் பொறுப்போம் பின்னர் பார்ப்போம் என்னும் எண்ணம் இன்றி, இடையின்றி உழைத்துவந்தார். அவருடைய அயராத தொண்டின் விளைவாக இந்த இரு துறைகளிலும் நாட்டுமக்கள் போற்றிப் புகழ்ந்து பாராட்டத்தக்க பொன்னான சாதனைகள் ஏற்பட்டிருக்கின்றன. சென்ற சில மாதங்களாகத் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சி—மழையின்மை—பயிர் செய்ய இயலாத வேதனைநிலை—ஆகிய இடுக்கண்களும் இன்னல்களும் நிறைந்த சூழ்நிலையிலும், ஏற்பட்டுவிட்ட வேதனையைக் குறைக்கவும், இன்னலை அகற்றவும் அவர் ஆற்றிவந்த பணி, மாற்றுக் கட்சியினரின் மனத்தையும் குளிர வைக்கும் தன்மையதாக அமைந்திருந்தது.

தஞ்சை மாவட்டத்தில் நெடுங்காலமாக ஒரு போக நிலங்களாக மட்டுமே இருந்த இலட்சக்கணக்கான ஏக்கர் பரப்பளவுள்ள வயல்களைச் சென்ற இரண்டாண்டுகளில் தி.மு.க. அமைச்சரவை இரு போக நிலங்களாக மாற்றி அமைத்துள்ளது. இம் மாபெரும் மாற்றத்தின் விளைவாக அம் மாவட்டத்தில் நெல்லின் விளைவு வியக்கத்தக்க அளவு பெருகியுள்ளது. தமிழகத்தில் மாபெரும் வறட்சி ஏற்பட்டுள்ள இந்த ஆண்டில்கூடத் தஞ்சை மாவட்டத்தில் வழக்கமாக நடைபெறும் அளவு அறுவடை ஏற்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல, அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ள கொள்முதலின் அளவு, முந்திய ஆண்டுகளை யெல்லாம் மிஞ்சிய அளவுக்கு அமைந்துள்ளது. இச் சாதனைகளுக்கெல்லாம் மூல காரணமாக அமைந்திருப்பது, அந்த மாவட்டத்தில் சென்ற சிலஆண்டுகளாக ஏற்பட்டுள்ள "பசுமைப் புரட்சி" எனப்படுகிற வேளாண்மைப் பெருமாறுதலே ஆகும். ஒரு போக நிலங்கள் இரு போக நிலங்களாக மாற்றி அமைக்கப்படுதல், ஏராளமான அளவிலும் தேவையான நேரத்திலும் இரசாயன உரங்களும் பூச்சிக் கொல்லி மருந்துகளும் அளிக்கப்படுதல், சராசரி ஏக்கரா விளைச்சல் கூடுதலாக அமைதல், உர விற்பனையில் பல்லாண்டுகளாக இருந்துவந்த கள்ள வாணிபமும் ஊழலும் கையூட்டும் அகற்றப்படுதல் முதலிய ஏற்பாடுகள், இந்த வேளாண்மைப் புரட்சியின் முதன்மையான கூறுகள். விளைச்சலைப் பெருக்கி, உழவர்களை உயர்த்தி நாட்டின் நலனைப் பேணி வளர்த்துள்ள இம் மாபெரும் புரட்சியை உருவாக்கி வளர்த்த பெருமையில் குறிப்பிடத்தக்க பங்கு அமைச்சர் கோவிந்தசாமி அவர்களுக்கு உண்டு. அந்த அன்புத் திருமகனாரின் செயலாற்றும் திறனுக்கும் நிர்வாகச் சீர்மைக்கும் பொது நலப் பற்றுக்கும் உரிய தலைசிறந்த எடுத்துக்காட்டாக இந்தப் புரட்சி என்றென்றும் இடம் பெறும்.

கோவிந்தசாமி அவர்கள் 1967ஆம் ஆண்டில் அமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் "முரசொலி" இதழின் தனி நிருபர், புதிய அமைச்சர் பொறுப்பைப் பற்றிய தங்கள் உணர்வு எத்தகையது?" என்று கேட்டபோது அமைச்சர் அவர்கள் அளித்த விடை, அண்ணாவின் பொறுப் புணர்ச்சி எத்துணைச் சீரியது எவ்வளவு சிறந்தது என்பதைப் படம்பிடித்துக் காட்டும் பான்மையதாக அமைந்துள்ளது.

"பேசாத வார்த்தைகளுக்குத் தான் நாம் எஜமான்; பேசிய வார்த்தைகள் நமக்கு எஜமான் என்று சொல்லப்படுவதுண்டு இதுவரை நாம்பேசிய வார்த்தைகள் இப்போது நமக்குக் கட்டளையிட்டுச் செயலாற்றுமாறு தூண்டுகின்றன. ஆகவே நாம் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு இருக்கவேண்டியுள்ளது." என்று அந்த அன்பு உருவம் அப்போது தெரிவித்த சொற்கள், அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் மட்டுமல்ல, எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய பேருண்மையைத் தம்மகத்தே கொண்டுள்ளன.

அமைச்சராகத் திகழ்ந்த காலம் முழுவதிலும் அன்பர் கோவிந்தசாமி, அப்பழுக்கற்ற தூய நிர்வாகத்தை மக்களுக்கு அளிப்பது தன்னுடைய தனிப்பெருங் கடமை என்கிற எண்ணத்தைத் தன் இதயத்தில் பொறித்துக் கொண்டதுமட்டுமல்ல, அந்த எண்ணத்திற்கு ஏற்ற வகையிலேயே எப்போதும் செயலாற்றி வந்தார்.

தன்னுடைய தன் நலனைவிடத் தன் கட்சியின் பொது நலனே பெரிது என்பது அவருடைய அழுத்தமான கருத்து. அந்தக் கருத்தின் அடிப்படையிலேயே சென்ற பதினேழு ஆண்டுகளாக-அதாவது அவர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக ஆனது முதல் அவருடைய கட்சிப் பணி அமைந்திருந்தது. தன்னுடைய கட்சியினிடமும் அதன் அரும் பெரும் தலைவர் அண்ணா அவர்களிடமும் அவர் கொண்டிருந்த பற்றும் பாசமும் தன்னிகரற்றவை.

தன் நலனைவிடத் தன் கட்சி நலன் பெரிது என்ற பேருண்மையில் அவர் கொண்டிருந்த தளராத நம்பிக்கையைப் போலவே, தன் கட்சி நலனைவிடத் தன் நாட்டு நலன் பெரிது என்ற சீரிய உண்மையிலும் அவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இந்த நம்பிக்கை அவருடைய இதயத்தில் உரிய இடத்தைப் பெற்றிருந்த காரணத்தால்தான், அவருடைய மரணம் அவருடைய கட்சியினருக்கு மட்டுமல்ல, நாட்டு மக்கள் அனைவருடைய உள்ளங்களுக்கும் தாங்கொணாத துயரத்தைத் தருவதாக அமைந்துவிட்டது.

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் வானொலி உரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதுபோல், அமைச்சரானபின் நாட்டினுடைய—நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அவர் பாடுபட்டார். ஆனால், தன்னுடைய—தன் குடும்பத்தினுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதுபற்றி அவர் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அரசியலிலே அவர் அபூர்வ மனிதர்—ஆயிரத்தில் ஒருவர்.

எளிய குடும்பத்தில் பிறந்து, எளிய மனிதராகவே வாழ்ந்து, எளியவர்க்கெல்லாம் வாழ்வளிக்கும் பெரும் பணியில் ஈடுபட்டு, எளியவராகவே மறைந்த கோவிந்தசாமி அவர்கள், எளியவர்களின் உள்ளங்களில் மட்டு மல்ல, எல்லோருடைய உள்ளங்களிலும் ஒரு நீங்காத நல்லிடத்தைப் பெற்று விட்டார்.

தனக்கென வாழாத பிறர்க்குரியாளர் என்கின்ற தொடர் அடிக்கடி எடுத்தாளப்படுகிறது. அல்லவா? "மணிமேகலை" என்னும் மாண்புமிகு இலக்கியத்தில் காணப்படுகிற இக் கவின்மிகு தொடருக்குரிய மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளில் உழைப்பின் உருவம்—அன்பின் சின்னம்—கோவிந்தசாமி அவர்கள் மிக முக்கியமான ஒருவர்.

1918ஆம் ஆண்டில், கடலூருக்கு அருகில் உள்ள தேங்காய்த்திட்டு என்னும் சிற்றூரில் பிறந்து, கடலூர் உயர்நிலைப் பள்ளியில் கல்வியறிவை அள்ளி விழுங்கி, பதினொராண்டுகள் அங்காடிகள் பற்றிய அரசாங்க அலுவலகம் ஒன்றில் எழுத்தராகப் பணியாற்றி, 1952ல் அந்த வேலையைவிட்டு அகன்று, சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்வு பெற்று, 1957ல் மறுமுறையும் எம்.எல்.ஏ. என்னும் சிறப்பைத் தழுவி, 1962 பொதுத் தேர்தலில் வெற்றிக்குரிய வாய்ப்பை இழந்த போதிலும் 1967 பொதுத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று, அனைவராலும் புகழத் தக்க அருமை மிகு அமைச்சராகப் பணியாற்றி, இத் திங்கள், காலத்தின் ஒரு பகுதியாக மாறிவிட்ட அண்ணல் கோவிந்தசாமி அவர்கள், தூய நிர்வாகத் திறனுக்கும் அப்பழுக்கற்ற பொதுத் தொண்டுக்குமுரிய சிறந்த எடுத்துக்காட்டாக என்றென்றும் தமிழகத்தின் நினைவில் அமர்ந்திருப்பார்.

தன் ஆருயிர்க் கணவரை இழந்து தவிக்கும் உத்தமர் கோவிந்தசாமி அவர்களின் அன்பு மனைவிக்கும், அவர்களின் அருமருந்தன்ன மக்கட் செல்வங்களுக்கும் “ **ஆரம்பக் கல்வி** ” யின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


என் அருமைத் தோழரை இழந்து வாடும் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கட்கும் ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும் நம் இதயம் நிறைந்த இரங்கலும் பரிவும் உரியன.

தமிழகமே! தாயகமே! எம்மையெல்லாம் பெற்று வளர்க்கும் பொன்னகமே! தங்கம் நிகர் திருநாடே! அடுக்கடுக்காக உனக்கு ஏற்பட்டுவரும் இழப்புகளை நீ எப்படித்தான் தாங்கப் போகிறாய்? உனக்கு யார்தான் ஆறுதல் கூறவல்லார்?

மெல்ல நகர்ந்து செல்லும் காலமே! நீ தான் விடை கூற வேண்டும்?

# திரு. கோவிந்தசாமி

## வாழ்க்கைக் குறிப்பு



●

திரு. கோவிந்தசாமி 1918ஆம் வருடம் ஜூன்மாதம் 15ஆம்தேதி யன்று பிறந்தார்.

கடலூர் நகரசபை உயர்நிலைப் பள்ளியில் அவர் படித்தார். தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியின் செயலாளராக அவர் சிறிது காலம் பணியாற்றினர்.

1953-ஆம் ஆண்டில் திராவிட பார்லிமெண்டரி கட்சியில் அவர் சேர்ந்தார். தென்னுற்காடு மாவட்ட தி.மு.க. செயலாளராக அவர் பணியாற்றினர். ஜில்லா போர்டு அங்கத்தினராகவும் அவர் இருந்திருக்கிருர்.

1940 முதல் 1951 வரையில் கடலூரில் வேர்க்கடலை மார்க்கெட்டிங் கமிட்டியில் அவர் பணியாற்றினர். 1956-லிருந்து சென்னைத் தொழில் மியூஸியத்தில் அவர் டைரக்டராக இருந்தார்.

1952-லிருந்து 1962-வரை தமிழ்நாடு சட்டசபை அங்கத்தினராக அவர் இருந்து வந்தார். மீண்டும் சென்ற பொதுத் தேர்தலில், தென்னுற்காடு ஜில்லா முகையூர் தொகுயில் வெற்றி பெற்ருர் அவரை எதிர்த்து நின்ற காங்கிரஸ் வேட்பாளரை 12000 வாக்கு மெஜாரிட்டியில் கோவிந்தசாமி தோற்கடித்தார்.

1967இல் அண்ணுதுரை அமைத்த மந்திரி சபையில் அவர் விவசாய மந்திரியாக இருந்தார். அண்ணுதுரை மறைவுக்குப் பிறகு கருணநிதி மந்திரி சபையில் உணவு விவசாய மந்திரியாக அவர் பணி புரிந்தார்.

அடக்க சுபாவத்துக்கும், பைல்கள் உடனுக்குடனே பைசல் செய்வதற்கும் பெயர் போனவர்.

அவருக்கு மூன்று பிள்ளைகளும், இரண்டு பெண்களும் இருக்கிருர்கள்.

சென்ற ஆண்டு மத்தியில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது திடீரென்று ரத்த வாந்தி யெடுத்தார். தக்க சமயத்தில் ரத்தம் செலுத்தப்பட்டு உயிர் பிழைத்தார். மீண்டும் நாகர் கோவில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கையில் சுகவீன மடைந்தார். அப்போதும் குணமடைந்து விட்டார்.

மத்திய தி மு.கவின் தொழிலாளர் பிரிவின் செயலாளராக அவர் இருந்து வந்தார்.

# செய்திச் சுருள்

## ஆங்கில இணைப்பு மொழி வட இந்தியருக்கு காமராஜ் அறிவுறுத்தல்

புது டில்லி, ஏப். 7—அந்தரங்க சுத்தியுள்ள தலைமை இல்லாததே மொழிப் பிரச்னை வெடித்ததற்குக் காரணம் என்று திரு. கே. காமராஜ் இன்று கூறினார்.

பழைய தலைமுறை முணுமுணுப்பின்றி இந்தியைக் கற்றது. காந்திஜியின் தலைமையின்கீழ் இந்தி சுதந்திர இந்தியாவின் மொழியாகும் என நம்பி வளர்ந்தோம் என்றார் அவர்.

இந்தியை சர்க்கார் பரப்ப வேண்டியிருந்தாலும் விரும்பாத மக்கள் மீது எந்த மொழியையும் திணிக்கலாகாது. இந்தியாவின் ஒற்மைக்கு அபாயம் ஏற்படக்கூடாது என்பதை முக்கியமாக கவனத்தில் வைக்கவேண்டும் என அவர் எச்சரித்தார். மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியானதும்,மொழி பிராந்தியம் முதலிய பிரச்னைகள் மறையும் என்றார் காமராஜ்.

தென்னிந்தியாவில் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருப்பதை வடநாட்டினர் பலர் உணர்வதில்லை என்று அவர் சொன்னார்.

## அதிக மகசூல் தரும் ''ஜயா'', ''பத்மா'' ரக நெல்கள் விதைப் பெருக்கத்துக்காக தஞ்சையில் 120 இடங்கள் தேர்வு

தஞ்சை, ஏப். 17—குறுகிய காலத்தில் பலிதம் அளிக்கும் 'ஜயா' 'பத்மா' என்ற அதிக மகசூல்தரும் புதிய ரகங்கள் இரண்டையும் வருகிற பட்டத்தில் பயிரிட்டு விதை நெல்லைப் பெருக்குவதற்காக தஞ்சை ஜில்லாவில் 120 இடங்களை தமிழ் நாடு சர்க்கார்தேர்ந்தெடுத்திருக்கிறது. விவசாய இலாகா கூட்டு டைரக்டர் திரு.ஏ. வெங்கட்ராமன் இதைத் தெரிவித்தார்.

'பத்மா' என்பது 115 நாள் பயிர் சன்னரகம், கட்டாக்கிலுள்ள மத்திய அரிசி ஆராய்ச்சி கழகத்தில் உருவாக்கப்பட்டது. ஒரு ஹெக்டேருக்கு(இரண்டரை ஏக்கருக்கு) 5 டன் பலிதம் தரக்கூடியது.

'ஜயா' என்பது ஹைதராபாதிலுள்ள அகில இந்திய அரிசி அபிவிருத்தி நிலையத்தில் உருவாக்கப்பட்டது. ஐ. ஆர்.-8 ரகத்தைவிட 12 சதவிகிதம் கூடுதல் விளைச்சல் தரக்கூடியது.

தவிர, நவீன சாகுபடி முறைகள் உர உபயோகம் ஆகியவை பற்றி, விவசாயிகளுக்கு எடுத்துரைப்பதற்காக, தஞ்சை ஜில்லாவில் விசேஷ

செயல் முறை நிலையங்களை ஏற்படுத்தப் போவதாகவும் அவர் சொன்னார். இந்த நிலையங்களைத் தனிப்பட்ட உரக் கம்பெனிகள் நடத்தி வரும் என்றார்.

இருபோக சாகுபடி திட்டத்தின் கீழ் குறுவை பட்டத்தில் 6 லட்சம் ஏக்கரில் பயிர் செய்யப் படும் என்றும் திரு. வெங்கட்ராமன் கூறினார்.

தஞ்சை ஜில்லாவில் சுமார் ஒரு லட்சம் ஏக்கர் பரப்பில்,, விமா மானம் மூலம் பூச்சிமருந்து தெளிக் கப்படும் என்றும் கூறினார்.

## தமிழ் எழுத்தாளர்களுக்கு அகில இந்தியப் பரிசு

புது டில்லி, ஏப். 23—தமிழ் எழுத்தாளர்கள் இருவருக்கு அகில இந்தியப் பரிசு கிடைத்திருக்கிறது. சமுதாய நல வளர்ச்சித் துறை, கூட்டுறவுத் துறை சார்பாக பல் வேறு மொழிகளிலும் வெளியாகி யுள்ள சிறந்த நூல்களுக்கு இன்று பரிசுகள் அறிவிக்கப்பட்டன. இத் திட்டத்தின்கீழ் 17 நூல்களுக்குப் பரிசு கிடைத்துள்ளன. இந்நூல் களைத் தேர்ந்தெடுப்பதற்கு நிய மிக்கப்பட்ட குழுவின் தலைவராக மத்திய அமைச்சர் திரு எம். எஸ். குருபாதசாமி பணியாற்றினார். தமி ழில் ''சமுதாய வளர்ச்சி'' என்ற நூலுக்காக திருமதி சீதாலட்சுமிக் கும் 'வினைபொருள் விற்பனை—ஒரு கூட்டுறவு நடவடிக்கை' என்ற நூலுக்காக திரு ஏ. சிவசுப்பிர மணியத்துக்கும். பரிசு கிடைத்தி ருக்கிறது. இவர்களுக்கு ரூ. 1000 வழங்கப்படும்

## இந்தியாவின் இரண்டாவது ராக்கெட் தளம்

### *சென்னையிலிருந்து 50 மைலில் அமைக்கப்படும்*

இந்தியாவின் இரண்டாவது ராக்கெட் தளம், ஆந்திரப் பிரதே சம் நெல்லூர் ஜில்லா, பழவேற் காடு ஏரிக்கு அருகில் ஹரிகோட் டாதீவில் அமைக்கப்படும் என்று உத்தியோக முறையில் அறிவிக்கப் பட்டுள்ளது.

பல இடங்களை அவற்றின் தகுதிகளை மனதிற் கொண்டு பரி சீலனை செய்த பிறகு இரண்டாவது ராக்கெட் தளம் அமைப்பதற்கு இந்திய சர்க்கார் திரு. ஹரிகோட்டா தீவை பொறுக்கி எடுத்துள்ளது. இந்தத் தீவு சென்னையிலிருந்து சுமார் 50 மைல் தூரத்தில் உள் ளது. இந்தத் தீவுக்கு வடக்கிலும் தெற்கிலும் உப்பங்கழி சூழ்ந்துள் ளது. கிழக்கே வங்கக் குடாக் கடல் சீறிக்கொண்டிருக்கிறது. இந்தத் தீவு 50 சதுர மைல் பரப்பு உள்ளது.

ராக்கெட் தளத்திற்குத் தீவில் தேவையான நிலம் தந்து உதவ ஆந்திரப் பிரதேச சர்க்கார் ஒப்புக் கொண்டிருக்கிறது. அத்துடன் தீவுக்கான சாலை பாலங்கள் முதலி யன அமைத்து வசதி செய்து கொடுக்கவும் ஆந்திரப் பிரதேச சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது.

இந்தத்தளம் ராக்கெட் சோதனைகள் நடத்தவும், விண் வெளி ஆராய்ச்சிக்காகவும், ஆக்க ரீதியான விஞ்ஞான சோதனைகளை நடத்த செயற்கைக் கோளங்களைச் செலுத்துவதற்காகவும் உபயோகிக்கப்படும்.

## 12 மாதங்களில்

அடுத்த 12 மாதங்களில் புதிய தளத்தில் சோதனைகள் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதலாவது ராக்கெட் தளம் கேரளாவில் தும்பா என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது. 1963 முதல் அந்தத் தளத்தில் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

## நிலாவில் முதலில் இறங்குபவர் ஆம்ஸ்டிராங்

அமெரிக்காவின் ', அப்போலோ -11'' விண்வெளிக் கப்பலின் தலைவரான நீல் ஆம்ஸ்டிராங் சந்திரனில் முதல் முதலாக அடி எடுத்து வைக்கும் மனிதராக இருப்பார் என்று இன்று விண்வெளி ஆராய்ச்சி ஸ்தாபனம் அறிவித்தது.

ஆம்ஸ்டிரங்கும், விமானப்படை கர்னல் எட்வின் ஆல்டிரினும் நிலா ஊர்தியின் மூலம் சந்திரனில் இறங்குவார்கள். ஊர்தியை ஏற்றிச் செல்லும் தாய்க் கப்பல் சந்திரனைச் சுற்றிக் கொண்டிருக்கும்.

சந்திரனில் ஊர்தி இறங்கிய பல மணி நேரத்துக்குப் பிறகு அதிலிருந்து ஆம்ஸ்டிராங் (38) வெளியே வருவார்.

அப்போலோ-11 தாய்க் கப்பல் மேலே சுற்றிக் கொண்டிருக்கும். அதை விமானப் படை கர்னல் மைக்கேல் காலின்ஸ் செலுத்திக் கொண்டிருப்பார் என்று அப்போலோ திட்ட நிர்வாகி ஜார்ஜ் லோ இன்று நிருபர்களிடம் கூறினர்.

அப்போலோ-11 பயணத்துக்கு முன்பு "அப்போலோ-10" ஒத்திகைப் பயணம் செல்லும். மே 18-ம் தேதி புறப்படும். அதில் உள்ள விண்வெளி வீரர்கள் சந்திரனுக்கு 10 மைல் தொலைவில் செல்வார்கள். ஆனால் கீழே இறங்க மாட்டார்கள்.

சந்திரனில் அவர்கள் 22 மணி நேரம் தங்கியிருக்கும் போது அவர்கள் செய்யும் முதல் காரியம் எதிர்பாராத அபாயம் ஏற்பட்டால் உடனே கிளம்ப நிலா ஊர்தியைத் தயார் செய்வதாகும்.

நான்கு மணி நேர ஓய்வு பெற்ற பிறகு ஊர்தியின் கதவைத் திறந்து, ஒரு ஏணி வழியாகச் சந்திரன் தரையில் இறங்குவார்கள்.

பிறகு சந்திரன் மண்ணைக் கொஞ்சம் எடுத்துக் கொண்டு ஊர்திக்குத் திரும்புவர்.

பிறகு இருவரும் ஊர்திக்கு 100 அடி தூரத்துக்குள் நிலாவை சுற்றிப் பார்ப்பார்கள். சந்திர மண்டல தரையமைப்பின் சில சாம்பிள்களை, அவர்கள் எடுப்பார்கள், போட்டோ படங்களையும், டெலிவிஷன் கலர்ப் படங்களையும் பிடிப்பார்கள்.

அவர்கள் ஊர்திக்குத் திரும்பி 4 அல்லது 5 மணி நேரம் ஓய்வு பெற்ற பிறகு தாய்க் கப்பலுக்குத் திரும்ப தயாராவார்கள்.

## புதையல் எடுக்க அம்மனுக்கு நரபலி

### *ராஜஸ்தான் கிராமத்தில் மூவர் கைது*

டோங்கு ஜில்லாவில் அகோரியா கிராமத்தில், புதையலை எடுப்பதற்காகச் சாமுண்டி மாதாவுக்கு நரபலி கொடுத்ததாக மூவர் கைது செய்யப்பட்டனர்.

ராஜஸ்தானிலுள்ள இந்தக் கிராமத்தில் மார்ச் 3ஆ-யன்று (ஹோலி பண்டிகையன்று) பஜ்ரங்க கடி என்பவரை சாமுண்டிக்கு நரபலி கொடுத்தனர். அவருக்கு வயது 50. அவர் கலியாணமாகாதவர். பாலாபூர் வாசி. அகோரியாவில் அவரது தம்பி வசிக்கிறார்.

நரபலி சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட கோல்கா பில் (22 வயது) ஹரலாலா ஜாட் (35 வயது), மோடியா சாமார் (40 வயது) ரிமாண்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### கொடூரம்

மோடியா சாமாரின் ஒப்புதல் வாக்குமூலம், கி பி.கோ.164-வது பிரிவின் கீழ் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பதிவு செய்யப்பட்டது. பலி கொடுக்கும் இடத்துக்கு கோல்கா தன்னைக் கூப்பிட்டதாக மோடியா சொன்னான். பஜ்ரங்க கடியின் கழுத்தில், நெஞ்சுப் பகுதியிலிருந்து ரத்தம் புட்டியில் வடித்தெடுக்கப்பட்டுச் சாமுண்டிக்குப் படைக்கப்பட்டது.

## தமிழில் சிறந்த நீதிமன்ற தீர்ப்புகள் தொகுப்புக்கு ரூ. 5000 பரிசளிக்க அரசு முடிவு

சார்நிலை நீதி மன்றங்களில் (சபார்டினேட் கோர்ட்) தமிழை நீதிமன்ற மொழியாக்குவதென்ற அரசாங்கத்தின் எண்ணத்துக்கிணங்க உரிமை வழக்குகளிலும் குற்ற வழக்குகளிலும் தமிழில் எழுதப்பட்ட மாதிரி தீர்ப்புகளைக் கொண்ட ஒரு வெளியீட்டை வெளியிடுவதென்று அரசு முடிவு செய்திருக்கிறது. சிறந்த மாதிரி தீர்ப்புகளைச் சேகரிப்பது சம்பந்தமாக ரூ. 5000 அளவில் பரிசுகள் வழங்குவதென்றும் அரசு தீர்மானித்திருக்கிறது. இந்த ரூ. 5000, இரு பரிசுகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும். உரிமை வழக்குகளில் சிறந்த தீர்ப்பு மாதிரிகளைத் தொகுக்க ரூ. 3000மும், குற்ற வழக்குகளில் சிறந்த தீர்ப்புமாதிரிகளைத் தொகுக்க ரூ. 2000 மும் பரிசு வழங்கப்படும்.

—"தினமணி"

# திரு. ஜாகிர் உசேன் வாழ்க்கை வரலாறு

●

கல்வித் துறையில் விசேஷ ஈடுபாடுகொண்டிருந்த அன்னூர் வர்தா கல்வித்திட்டத்தை வகுத்து உதவியவர். எம். ஏ. பட்டம் பெற்ற ஜாகிர் ஹுசேன் பெர்லின் சர்வகலாசாலையில் பி. எச். டி. பட்டம் வாங்கினர். டில்லி, கல்கத்தா, அலகாபாத், அலிகார், கெய்ரோ சர்வகலாசாலைகள் இவருக்குக் கௌரவப்பட்டங்கள் வழங்கி இவரது புலமையைப் பாராட்டியுள்ளன. 1962-ம் ஆண்டிலிருந்து டில்லி சர்வகலாசாலையின் அத்யட்சகராக இருந்திருக்கிருர்.

ஹைதராபாத்தில் 1897 பிப்ரவரி 8ம்தேதி பிறந்தார். உ. பி. ராஜ்யத்தைச் சேர்ந்த எட்டாவாவில் இஸ்லாமிய உயர்நிலைப்பள்ளியிலும் அலிகார் எம்.ஏ.ஓ. கல்லூரியிலும் மேல் படிப்புப் படித்து, பெர்லின் கல்லூரியில் பயின்று பி. எச். டி. பட்டம் பெற்ருர்.

1948 லிருந்து 1956 வரை அலிகார் முஸ்லிம் சர்வ கலாசாலையின் உப அத்தியட்சகராக இருந்திருக்கிருர்.

## கல்வித்துறைப் பணிகள்

கல்வித்துறை பல்வேறு கமிட்டிகளிலும் கமிஷன்களிலும்பயனுள்ள தொண்டு புரிந்திருக்கிருர்.

1959-ம் ஆண்டுவரை மத்திய செகண்டரி கல்வி போர்டின் தலைவர்; ஆதார தேசியகல்விக் கமிட்டியின் தலைவர் என்ற முறையில் கல்வித் துறைக்கு அவர் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை. 1959 ஜூன் வரை, சர்வ கலாசாலை மானிய கமிஷன் அங்கத்தினராக இருந்திருக்கிருர்.

1956லிருந்து 58 வரை யுனெஸ்கோ ஸ்தாபன நிர்வாக போர்டில் அங்கம் வகித்திருக்கிருர்.

சர்வ கலாசாலை கல்விக் கமிஷன் இந்திய பத்திரிகை கமிஷன் ஆகியவற்றிலும் அவர் அங்கம் வகித்து தமது அனுபவ ஞானத்தினல் அவை பயனடைய உதவியுள்ளார்.

## அயல் நாட்டுப் பயணங்கள்

1964ம் ஆண்டில் ஐ. அ. கு. மொராக்கோ, அல்ஜீரியா, டுனிசியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கிருர், அடுத்த ஆண்டில் குவாயத், சவூதி, அரேபியா, ஜோர்டான், கிரீஸ் ஆகிய நாடுகளில் 22 தினங்கள் சுற்றுப் பிரயாணம் செய்து, இந்தியாவின் நல்லெண்ணத்தைப் பரப்பினர். அதே ஆண்டில் மாஸ்கோவுக்கு விஜயம் செய்திருக்கிருர்.

ராஷ்டிரபதியாகப் பதவியேற்ற பிறகு, 1967 ஜூனில் கனடாவுக்கும், 1968 ஜூனில் ஹங்கேரி, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்தார்.

அவர் பொருளாதார விஷயங்கள் சம்பந்தமாகப் பல நூல்களை எழுதியுள்ளார். பிளேடோ எழுதியுள்ள "குடியரசு" என்ற நூலை உருது மொழியில் மொழிப் பெயர்த்திருக்கிறார்.

டாக்டர் ஜாகீர் ஹுசேன் தகப்பனார் ஒருவக்கீல் "எய்ன்-ஏ-டெக்கான்" என்ற சட்டபத்திரிகையின் ஆசிரியராக இருந்து வந்தார்.

இளம் பருவத்தில் வீட்டிலேயே ஒரு ஆங்கில ஆசிரியரின் மேற் பார்வையில் ஜாகீர்ஹுசேனுக்குக்கல்வி கற்பித்து வந்தார். 1907ல் அவரது குடும்பம் உ. பி.யிலுள்ள எட்டாவாவுக்குக் குடியேறி விட்டது. அங்கு அவரும் அவரது 3 சகோதரர்களும் உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டனர்.

## மகாத்மாவுடன் தொடர்பு

1920இல் நாட்டில் காட்டுத் தீ போல் பரவிவந்த ஒத்துழையாமை இயக்கத்தால் கவரப்பட்ட ஜாகீர் உசேன் மகாத்மா காந்தியுடன் தொடர்பு கொண்டார். அன்று ஆரம்பமான தொடர்பு காந்திஜியின் வாழ்நாள் பூராவும் நீடித்தது.

கல்வித் துறையில் தேசியப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட இளைஞர்களில் ஜாகீர் ஹுசேனும் ஒருவராக விளங்கினர். 1920ல் டில்லியில் ஜமியாமிலியா என்ற கல்வி ஸ்தாபனத்தை காந்திஜி நிறுவியதற்கு பொறுப்பாளியாயிருந்தவர்களில் ஜாகீர் ஹுசேனும் ஒருவர்.

அரசியல் என்ற குறுகிய பாதையினால் மட்டும் தேசிய மறுமலர்ச்சியை அடைந்து விட முடியாது. கல்வித் துறையில் ஒரு புதிய நோக்கு, ஒரு புதிய தேசிய வாழ்க்கை நெறி ஆகியவற்றால் மட்டுமே அது சாத்தியமாகும் என்ற நம்பிக்கை அவரை ஆட்கொண்டு விட்டது.

அப்போது நாட்டில் நிலைபெற்று விட்டிருந்த குறுகிய ஆங்கிலக்கல்வி முறை உயிர்த்துடிப்புடன் கூடியதல்ல என்று ஜாகீர் ஹுசேன் கருதினர். ஜமியா மிலியா ஸ்தாபனம் மூலம் ஜீவசக்தியுடன் கூடியதும்நம்தேசத்தின் பரப்பிலும், கலாசாரத்திலும் ஊறியதுமான ஒரு புதிய கல்வி முறையை உருவாக்கப் பாடுபட்டார்.

நாட்டின் பொறுப்பு வாய்ந்த குடிமக்களாக இளைஞர்களை உருவாக்க விழைந்த ஒரு புதிய கல்வி முறையை உருவாக்கும் பணியில் ஈடுபட முன் வந்த ஸ்தாபனமாக ஜமியா மில்லியா விளங்கியது.

சுமார் 30 வருஷ காலம் அவர் ஸ்தாபனத்தின் உப அத்தியட்சகராகப் பணியாற்றி வந்தார். எத்தனையோ இடையூறுகளுக்கும் சோதனைகளுக்குமிடையில் மனம் தளராமல் உறுதியான நம்பிக்கையுடன் அவர் இந்தப் பொறுப்பை வகித்து வந்தார்.

ஆதாரக் கல்விபற்றி மகாத்மாஜி கொண்டிருந்த கருத்துக்களை, அமல் படுத்துவதற்கான நடைமுறைத் திட்டத்தை வகுத்து உதவியவர் டாக்டர் ஜாகிர்ஹுஸேனே. ஹிந்துஸ்தானி தாலிம் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் இந்தப் பொறுப்பை அவர் திறமையாகச் செய்து முடித்தார். பள்ளிப் படிப்பானது வெறும்யந்திர கதியில் அல்லாமல் அன்றுட வாழ்க்கையைஒட்டிய ஒரு சுவாரஸ்யமான அனுபவமாக விளங்கும்படி செய்வது இந்தத் திட்டம். தவறான கண்ணோட்டத்தின் விளைவாக ஆதாரப்பள்ளிகள் வெறும் நூற்பாலைகளாகவும், நெசவாலைகளாகவும் மாறிவிடக்கூடிய அபாயம் நேரிடாதபடிபார்த்துக் கொண்டார்.

## "பத்ம விபூஷன்"

கலாசாரம், கல்வி ஆகிய துறைகளில் அவரது அரும்பணியைக் கௌரவிக்கும் வகையில் 1954இல் அவருக்கு 'பத்ம விபூஷன்' விருது வழங்கப்பட்டது.

ராஜ்ய சபைக்கு அவர் 1952ல் நியமனம் செய்யப்பட்டார். இலக்கியம், விஞ்ஞானம், கலை, சமூக சேவை ஆகிய துறைகளில் சீரிய தொண்டாற்றியவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஸ்தாபனங்களில் ஒன்றுக்கு அவர் நியமனம் செய்யப்பட்டார்.

மீண்டும் 1956ல்ராஜ்ய சபைக்கு நியமனம் செய்யப்பட்டார். 1957 ஜூலை 6ந்தேதி யன்று பீகார் கவர்னராக ஆகும் வரை அவர் ராஜ்ய சபை அங்கத்தினராக இருந்து வந்தார்.

1962 மே மாதத்தில் உபராஷ்டிரபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

—"தினமணி"

# நினைவுக்கு விருந்து
# காலை நினைவுப் பூங்கா

(தொகுத்தவர் :—R. சந்திரநாத் ஜெயின்)

●

*முன்னுரை :—நினைவுப் பூங்காவின் நிழல்தனிலே சுவை மணக்கும் சிற்றுண்டியாம் நற்பழக்கங்கள் பல கீழே விவரிக்கப்பட்டுள்ளன. நண்பர்கள் சுவைத்து உண்பதற்கேற்பவும், இலகுவில் சீரணிக்கும் அளவிலும், அன்றாடம் நம்மை எதிர்நோக்கி வரும் சுகதுக்கங்களைப் புன்னகையுடன்வரவேற்று, அன்றாட பளுவைச்சமாளித்துக்கொள்வதற்கும்அருமருந்தாம் நீவிர் கீழ்க்காணும் நல்லுரைகள். அமெரிக்கப் பெரியார் " கார்னெகி', என்பார் தம் அனுபவத்தில் கைக் கொண்டு வெற்றி கண்ட பாதையைத்தான்நமக்குக்காண்பித்துக் கொடுக்கிறார். நாமும் பயன் பெறுவோமாக!*

❋

1. இன்று நான் மகிழ்ச்சியுடன் இருந்தே தீருவேன். ஆப்ரகாம்லிங்கன் கூறியதுபோல ஒருவனை எந்த அளவுக்குச் சந்தோஷமாய் இருக்கவேண்டு மென்று முடிவு செய்து கொள்ளுகிறானோ அதே போல் மகிழ்வுடன் இருந்தே தீருகிறான் என்பது உண்மை அல்லவா? மகிழ்ச்சியைத் தேடிக் கொண்டு வேறு எங்கும் அலைய வேண்டுமா என்ன? அப்பொருள்தான் நம் கையில் நமக்குள்ளேயேதான் அடங்கிக் கிடக்கிறது. வேண்டுமளவு எடுத்து உண்போமாக!

2. நிச்சயமாகஇன்று என்னஇருக்கிறதோ, அதைவைத்துக்கொண்டு நிலைமையை சமாளித்துக்கொள்வேனேயன்றி என் இச்சைகளுக்கு ஏற்ப இன்னின்னவாறு தான் நடக்கவேண்டுமென்று முடிவு கட்டமாட்டேன். குடும்பத்திலும் சரி, வியாபாரத்திலும் சரி, ஏன் என் இன்றைய அதிர்ஷ்டக் கணக்கிலும் சரி என்ன நடக்கிறதோ அதை அப்படியே வரவேற்றுப் புன்னகையுடன் அணைத்துக்கொள்வேன். கலங்கமாட்டேன்.

கண்டிப்பான விரதம் பூண்டுள்ளேன். இன்று என் உடலைப் பேணிக் காத்தே தீருவேன். அலட்சியம் செய்யமாட்டேன். அதற்குப் பயிற்சி கொடுப்பேன்.

கருத்துடன் காப்பேன். என் உடலைப்பற்றிக் கவலைப்பட்டே தீருவேன். எனக்குத் தெரியும், இவ்வாருனால் அது என் விருப்பத் திற்கேற்ப வளைந்து கொடுக்கும் என்று.

இன்று என் மனத்திற்கோர் அரிய விருந்து, சோறு விருந்தானால் வயிறு புடைக்கும். கருத்தும் காரியமும் விருந்தானால் மனத்திற்கு திடம் தானே. உபயோகமானதைச் செய்யக் கற்றுக் கொள்வேன். மெய் மறப்பேன்.

6. உடலைக் காத்தேன். மன உறுதி கொண்டேன். ஆத்ம வழி அடைந்தேன். அவ்வழி கிட்டிய உடனேயே பிறர் அறியாமலேயே அவர்க்கு நல்லது செய்ய வேண்டுமென்ற எண்ணம் வருகிறது. அதுபோலவே செய்வேன்.

6. இன்று எவ்விடமும், எல்லோரிடமும் சமாதானமாகத்தான் இருப்பேன். காண்போர் கண்ணுக்கு அருவருப்பு இல்லாமலும், கூடிய வரையில் நல்லுடை அணிந்தும் மெல்லெனப் பேசியும், பரிவுடன் இருந்தும் அடுத்தவருக்கு உரிய புகழ்ச்சியை மிகுதியாகக் கொடுத்தும், மற்றவரைக் குறை கூருமலும், எதிலும் குற்றம் காணுமலும் எவரையும் திருத்த முற்படாமலும் இன்று மட்டும் இருந்துவிட்டேனேயாகில் நிம்மதிக்கு அளவேது ?

7. இன்றைய பிரச்னைதான் இன்று எனக்கு. வாழ்நாள் பூராவுக்கும் உள்ளவற்றைக் குறித்து இன்று ஒரு நாளில் கவலைப்பட்டுப் பயன் என்ன ? வாழ்நாளில் மிஞ்சிக் கிடக்கும் பணிதனிலே பன்னிரு மணி நேரத்தில் எவ்வளவோ முடிக்கலாமே !

8. இன்று திட்டமிட்டுச் செயலாற்றுவேன். ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு மணி நேரத்திலும் என்ன செய்ய வேண்டுமென்பது குறித்து வைத்திருக்கிறேன். இம்மி பிசகாமல் அதை அப்படியே செய்ய முடியுமென்று நான் நினைக்கவில்லை.

இருப்பினும் குறித்தபடி செய்ய முயலுவேன். அவசரமும் நிதானமின்மையும் பறந்தே போகும்.

இன்று நாள் முடிவில் அரைமணி நேரம்எனக்கேசொந்தம். முடிந்தால் எல்லாம் வல்ல இறைவனைப் பற்றி இந்நேரத்தில் சற்று நினைப்பேன். மறுநாள் தொடக்கமே வெகு ஊக்கமுடனிருக்கும் என்பதை நானறிவேன்.

10. நன்ருகத் தெரியுமெனக்கு ஒரு உண்மை. நான் எவரையெல்லாம் அன்புடன் நேசிக்கிறேனே அவர்கள் எல்லோரும் ஒருவர் விடாமல் என்னிடம் பாசம் கலந்த நேசம் கொண்டுள்ளார்கள். நான் மகிழ்ச்சியடைவதற்குப் பின் வாங்கமாட்டேன். இன்பம் தருபவற்றை அனுபவித்தே தீருவேன். எங்கெல்லாம் அன்பு உள்ளதோ அங்கெல்லாம் நேசம் உள்ளது.

அன்பே கடவுள் !

அறிவே முதல் ! !

இன்றே பொன்னுள் ! ! !

# வியப்புகள் நிறைந்த விண் வெளிப் பயணம்

*

விண்வெளிக் கலங்களை விண் வெளியில் செலுத்தும் ஏவுகணை இயந்திரங்களுக்கு வேண்டிய ஆற்றல் எப்படிக் கிடைக்கிறது?

ஏவுகணை (ராக்கெட்) இயந்திரங்களுக்கு வேண்டிய ஆற்றலைத் தருபவை சில ரசாயனப் பொருள்களாகும்; இந்த ரசாயனப் பொருள்களை ஒன்று சேர்க்கையில் சில வாயுக்கள் உண்டாகின்றன; இவையே விண்வெளிக் கலத்தைச் செலுத்துவதற்கு வேண்டிய உந்து விசையைத் தருகின்றன.

விண்வெளியில் விண்வெளிக் கலங்கள் பயன்படுத்தும் எரி பொருள் யாது?

பெரும்பாலான ஏவுகணை இயந்திரங்கள் மண்ணெண்ணெய் முதலிய ஹைட்ரோகார்பன் பொருள்களை எரிபொருளாகப் பயன்படுத்துகின்றன. இவை உற்பத்தி செய்யும் உந்துவிசைகள் ஏறக்குறைய விநாடிக்கு 300 ராத்தல்களாக இருக்கும்.

ஸென்டார், ஸாட்டர்ன் முதலிய உயர்தர ஏவுகணைகளின் மேல் கட்ட இயந்திரங்களில் இன்னும் அதிக ஆற்றலுள்ள எரிபொருள்கள் பயன்படுகின்றன. திரவ நிலையிலுள்ள ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் முதலியவை இந்த எரி பொருள்கள். இவற்றால் உற்பத்தியாகும் உந்துவிசை விநாடிக்கு 400 ராத்தலுக்கு மேலாகும்.

விண்வெளிக் கலத்தை எந்த வேகத்தில் செலுத்தினால் அது பூமியின் ஈர்ப்பு விசையினின்று விடுபட்டு அப்பால் செல்ல முடியும்?

விண்வெளிக் கலம் ஒன்று பூமியிலிருந்து முழுமையாக விடுபட்டு அப்பால் செல்வதற்கு வேண்டிய வேகம் மணிக்கு ஏறக்குறைய 25,000 மைல் ஆகும். "விடுபடு வேகம்" என்று இதைக் குறிப்பிடுவார்கள்.

பூமியை வலம்வரும் விண்வெளிக் கலம் விண்வெளிப் பாதையிலிருந்து விலகாமல் இருப்பதேன்?

இதற்குரிய விடை ஒரு புதிர் போலத் தோன்றும். வலம் வரும் விண்வெளிக் கலம் இடைவிடாது பூமியை நோக்கி விழுந்த வண்ணம் இருப்பதனால்தான் அது விண்வெளிப் பாதையிலிருந்து விலகாமல் வலம் வந்த வண்ணம் இருக்கிறது! அது பூமியை நோக்கி விழுந்த வண்ணம் இருந்தாலும், பூமிக்கும் அதற்கும் உள்ள தூரம் குறைவதில்லை.

இது எப்படி எனில், ஐஸக் நியூட்டன் கூறிய உவமையைக்

காண வேண்டும். அவர் கூறினார் : பீரங்கியிலிருந்து கிளம்பும் குண்டு செல்லும் வளைவான பாதை பூமியின் வளைவுக்கு இணையாக இருக்குமானால், அந்தக் குண்டு எப்போதும் பூமியை வளையம் வந்த வண்ணம் இருக்குமே ஒழியப் பூமியில் வந்து விழாது.

எடையற்ற நிலையில் செல்லும் உயிர்வாழ்வன எவ்வாறு பாதிக்கப் படுகின்றன ?

எடையற்ற நிலை இனியதோர் உணர்ச்சியை உண்டுபண்ணுகிறது என்று விண்வெளி விமானிகள் எல்லோரும் கூறுகிறார்கள். திசையும் நிலையும் அறிவதில் எவ்விதமான சங்கடமும் ஏற்படவில்லை என்கின்றனர்.

பிராணிகளையும் உயிரணுக்களையும் தாவரங்களையும் எடையற்ற நிலை எவ்வாறு பாதிக்கிறது என்று ஆராய 1967 செப்டம்பர் மாதம் பயோஸாட்டலைட்-2 என்ற செயற்கைக் கோள் செலுத்தப்பட்டது. அதில் 560 குளவிகள், 120 தவளை முட்டைகள், 1,000 மாவு வண்டுகள், 875 அமீபாக்கள், 13,000 பாக்டீரியா ஸெல்லுகள், ஒரு கோடி ஆரஞ்சு ரொட்டிப் பூஞ்சை விதைத் தூள்கள், ஒன்பது மிளகுக் கொடிகள் முதலிய பல உயிரினங்கள் வைத்து அனுப்பப்பட்டன.

பூமியில் உள்ள ஈர்ப்பு விசையில் நூறாயிரம் பங்கில் ஒரு பங்குகூட இவை சென்ற விண்வெளிப் பாதையில் இல்லை. அங்கு இவற்றின் மீது கதிரியக்கம் வேறு பாய்ந்தது. அந்தச் செயற்கைக் கோள் மீண்டும் பசிபிக் கடலில் வந்து விழுவதற்கு முன் அது ஒரு விமானத்தால் மீட்கப்பட்டது. பின்னர் அதனுள்ளிருந்த மேற்படி உயிரினங்களையெல்லாம் ஆராய்ந்தார்கள். கோதுமை நாற்றுக்கள் வழக்கத்துக்கு மாறான திசைகளில் வேர்விட்டு முளைத்திருந்தன ; மிளகுக் கொடிகள் தங்கள் இலைகளைக் கீழ்நோக்கி மடக்கி மடித்துக்கொண்டன ; பாக்டீரியா வேகமாகவும் அதிக அடர்த்தியாகவும் வளர்ந்திருந்தன.

சந்திரன் எப்படி உருவாயிற்று. அதன் இயக்கம், அமைப்பு என்ன என்று அறிந்திருக்கிறார்களா ?

அம்புலி உருவான வகைபற்றி ஒன்றும் அறியப்படவில்லை ; அதன் அமைப்பைப் பற்றியும் அநேகமாக ஒன்றும் தெரியவரவில்லை. ஆனால் அதன் இயக்கம் வலம் வர 29 நாட்கள் 12 மணி 44 நிமிட நேரம் ஆகிறது ; அப்படி வலம் வரும் போதே அது தானேயும் சுழன்று கொள்கிறது ; இவ்வாறு தன் அச்சில் ஒரு சுற்றுச் சுற்றுவதற்கு அதற்கு ஆகும் காலம் 27 1/3 நாட்களாகும். இவ்விருவகை இயக்கங்களின் பயனாக அம்புலியில் கிட்டத்தட்ட ஒரே பக்கந் தான் எப்போதும் பூமியைப் பார்த்த வண்ணம் இருக்கிறது ; நிலாவின் மேற்பரப்பில் நூற்றுக்கு 59 பங்கு மட்டுமே இவ்வாறு பூமிக்குத் தெரிவதாகிறது.

பூமியை நீள்வட்டமானதொரு பாதையில் நிலா வளையம் வரு

கிறது. அப்போது அது பூமிக்கு மிகவும் கிட்ட வருகையில் இரண்டுக்குமுள்ள தொலைவு 3 54,400 கிலோ மீட்டர்; மிகவும் எட்ட இருக்கும் தூரம் 4,04,320 கிலோ மீட்டர்.

சந்திரனின் குறுக்களவு (விட்டம்) 3,456 கிலோ மீட்டர். அதன் ஈர்ப்பு விசை பூமியின் ஈர்ப்பு விசையில் ஆறில் ஒரு பங்கு. அதன் பொருண்மை (மாஸ்) பூமியின் பொருண்மையில் எட்டில் ஒரு பங்கு. பூமியின் அடர்த்தி (டென்ஸிட்டி) தண்ணீரைப்போல் 5·5 மடங்கு. சந்திரனின் அடர்த்தி. தண்ணீரைப் போல் 3·3 மடங்கு.

ஆகவே நிலா குறைந்த எடையுள்ள சிறியதோர் கோளம் என்பது விளங்கும். பூமியைக் காத்துப் போர்த்துள்ள வாயு மண்டலம் என்னும் கவசம் ஏன் சந்திரனுக்கு இல்லை என்பதும் இதனால் விளங்கும்; ஏனெனில், ஈர்ப்பு விசை குறைவாக இருப்பதால் வாயு மண்டலத்தைப் பிடித்து வைத்துக்கொள்ள வலுவில்லை.

பூமிக்கு இருப்பது போல் நிலாவுக்குக் காந்த மண்டலம் இல்லை; பூமியைச் சுற்றி வான் ஆலன் வளையங்கள் என்ற கதிரியக்க அடுக்குகள் உள்ளது போல் அம்புலிக்குக் கதிரியக்க வளையங்களும் இல்லை. மின்விசை இயக்கத்தை அம்புலி பாதிப்பதில்லை; சூரியக் காற்றுகள் அம்புலியை அடுத்துப் பரவுகையில் எந்தவித மாறுதலும் அடைவதில்லை. 1967-ல் அமெரிக்கா செலுத்திய எக்ஸ்புளோரர்-35 இவ் விவரங்களைக் கண்டு தெரிவித்தது.

நிலாத்தரை ஓரளவு உறுதியாக உள்ளது என்று பெரும்பாலான விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்; சதுர அங்குலத்துக்கு ஐந்து ராத்தல் எடையை யாவது அது தாங்கக்கூடியதாகும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அங்குப் பள்ளமாக உள்ள பிரதேசங்களில் வெப்பமான இடங்கள் இருக்கின்றன என்றாலும் விண்வெளி விமானிகளுக்கு அவற்றால் அபாயம் இல்லை. நிலாத்தரையின் மேல் முகட்டுக்கு அடியிலிருந்து குமிழியிட்டுப் பொத்துக்கொண்டு வந்த எரிமலைக் குழம்பினால் ஆனவை இந்த இடங்கள் என்பது விஞ்ஞானிகள் கருத்து.

விண்வெளிக் கப்பலில் செல்லும் விண்வெளி விமானிகளின் நாடித் துடிப்பு, இரத்த அழுத்தம் முதலியன பற்றிய விவரங்கள் அவ்விண்வெளிக் கலத்திலிருந்து பூமிக்கு எப்படி அனுப்பப்படுகின்றன?

விண்வெளி விமானிகளின் நாடித் துடிப்பு, இரத்த அழுத்தம் முதலியவையும் விண்வெளிக் கப்பலின் இயக்கம் பற்றிய விவரங்களும் தொலைக் கணிப்பு முறை மூலம் பூமிக்கு அறிவிக்கப்படுகின்றன. அளக்க வேண்டியவற்றை ஓரிடத்தில் வைத்து அளந்து அத்தகவல்களை இன்னோரிடத்துக்கு அனுப்பி அங்கு அவை மதிப்பிடுவதும் பயனுவதும் தொலைக்கணிப்பு முறை என்பதாகும்.

உணர்வு இழைக் கருவிகள் அளக்க வேண்டியவற்றை அள

விடுகின்றன : அதன் பின் அத் தகவல்கள் மின்விசை அறிகுறிகளாக மாற்றப்படுகின்றன. இந்த அறிகுறிகள் ரேடியோ மூலம் பூமிக்கு அறிவிக்கப்படுகின்றன. கிடைக்கும் இடத்தில் இவை திரும்ப அவற்றின் அடிப்படையான தகவல்களாக மாற்றிக் கொள்ளப்படுகின்றன.

அமெரிக்க விண்வெளிக்கலங்கள் ஏன் தண்ணீரில் வந்து இறங்குமாறு அமைக்கப்படுகின்றன ?

கென்னடி முனையிலிருந்து பூமியை வலம் வருமாறு செலுத்தப்படும் விண்வெளிக் கலங்கள் பெரும்பாலும் கடலுக்கு மேலேயே செல்கின்றன. இறங்கும் இடத்தை விமானங்கள் நோந்து வந்து கண்காணிக்கின்றன. இறங்கிய கலத்தை விரைவில் கப்பல் மூலமாகவோ ஹெலிக்காப்டர் மூலமாகவோ கடலிலிருந்து மீட்பதற்கு இது வசதியாக உள்ளது.

—அமெரிக்கன் ரிப்போர்ட்டர்


# புதுமுறை சங்க வாய்பாடு

V.K. சேஷாத்திரி, B.A., L.T.

(Retired Deputy Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0-13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

# அறிவு வளர்ச்சி

[ ஜே. ஜே. துரைராஜ், பி ஏ., எல்.டி. ]

அகலில் எண்ணெய் இருந்தாலும், அதன் திரியை ஒரு சிறு தூண்டுகோலால் அடிக்கடி தூண்டிவிட்டுக் கொண்டிருக்காவிடில், பிரகாசமான ஒளி கிடைப்பது துர்லபம். இது அன்ருட வாழ்க்கை அனுபவம். களஞ்சியமாக நம் மனத்தில் புதைத்து வைக்கப்பட்டிருக்கிற பொருள் அல்ல அறிவு, அது சதா வளர வேண்டிய சுடர். கவலையுடன் அதன் வளர்ச்சியைக் கவனிக்காவிட்டால், மங்கிப் போனாலும் போகும்.

அறிவை வளர்க்கும் பிராயம் இளம் பருவம். நாட்கள் செல்லச் செல்ல, அறிவும் அனுபவமும் சேர்ந்து, மனிதனுக்கு ஆற்றலைக் கொடுக்கின்றன. அறிவு இல்லாமல், கேவலம் அனுபவத்தை மாத்திரம் கொண்டு அவ்வளவு பெரிய காரியங்களைச் சாதிக்க இயலாது. எனவே காலம் இருக்கும் போதே, நமது அறிவுச் சுடரைக் கொழுந்து விட்டுப் பிரகாசிக்கும்படிச் செய்ய வேண்டும்.

காகங்களின் கூட்டைக் கவனித்திருக்கிறீர்களா? போன வருஷம் அவைகள் இப்படித் தான் தங்கள் கூடுகளைக் கட்டின. இருபது வருஷங்களுக்கு முன் இருந்த காகங்களும் இவ்விதமாகவே தங்கள் கூடுகளைக் கட்டின. யுக யுகங்களுக்கு முன்பும் அப்படித் தான். இனி மேலும் அவைகள் கூடு கட்டும் விதத்தில் யாதொரு வித்தியாசமும் இருக்கப் போவதில்லை என்று வெகு நிச்சயமாகச் சொல்லிவிடலாம். காகங்களின் விஷயத்தில் அன்றும் இன்றும் என்றும் ஒன்றே. அறிவு இருக்கிறது காக்கைகளுக்கு. ஆனல் அனுபவத்தால் அந்த அறிவு யாதொரு வளர்ச்சியும் அடையவில்லை என்று தான் சொல்லவேண்டும்.

ஆனல் மனிதனே அப்படி அல்ல. தற்காலத்தில் அவன் கட்டி வரும் மாட மாளிகைகளையும் கூடகோபுரங்களையும் பாருங்கள்! அத்துடன் ஆதி மனிதன் குடியிருந்த குகைகளையும் குடிசைகளையும் எண்ணி ஒப்பிட்டுப் பார்த்தால், மனிதன் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறன் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போல் விளங்கும். ஆம், அறிவுடன் அனுபவத்தையும் சேர்த்த போது. ஆற்றல் வளர்ந்தது. இது தான் இரகசியம்.

உலகில் முன்னேறிச் செல்வது மனிதனே. அவன் உள்ளத்தில்

புதுப் புதுக் காரியங்களை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. இதற்குச் சாந்தி யளிக்கும் பாவனையில் அவன் செய்யும் ஒவ்வொரு செயலும் முயற்சியும் அறிவுப் பாதையில் மனித வர்க்கம் முன்னெடுத்து வைக்கும் ஒரு எட்டாக அமைந்து விடுகிறது.

சிறு குழந்தைகள் தங்கள் சூழ் நிலையை ஆராய்ந்து அறிய எவ்வளவு ஆத்திரம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் கவனித் தீர்களா ? ஒரு ரப்பர் பந்தை அவர்கள் கையில் கொடுத்துவிட்டுத் தூர நின்று வேடிக்கை பாருங்கள். குழந்தை பந்தை ஒரு தரம் பார்த்ததும் ஓய்ந்து விடாது. அதைத் திருப்பித் திருப்பிப் பார்க்கும். கைவிரலால் அமுக்கிப் பார்க்கும். கீழே போட்டுப் பார்க்கும். அதன் வர்ணத்தைப் பிய்த்தெடுக்க முடியுமா என்று ஒரு கை பார்க்கும் அதைத் தரையில் போட்டுப் பிடித்துப் பார்க்கும். வாயில் வைத்து ருசித்துக்கூடப் பார்த்துவிடும். ஆம், இது தான் குழந்தை சுபாவம். இதுவே அறிவை வளர்க்கும் சுபாவம்.

ஐந்து வயதுச் சிறுமியை எங்கேயாவது உலாவக் கூட்டிக்கொண்டு போனால், அது கேட்கிற கேள்விகள் தான் எத்தனை ? சில பெற்றோர்கள் அப்படிப்பட்ட கேள்விகளுக்கு உத்தரவு கொடுப்பதேயில்லை. குழந்தைகளை அதட்டி, “ம்ம், சும்மா வரமாட்டே ?” என்று சீறி, அவர்களுடைய வாயை மாத்திரம் அல்ல, அவர்கள் அறிவின் வாயிலையும் மூடிவிடுகிறார்கள். அதன் பின் பிள்ளை தானாகவே வாயை மூடிக் கொள்கிறது. மௌனம் சாதித்து விடுகிறது. கேள்வி கேட்க பயம். அறிவு வளர்க்க ஆசை. இவ்விரண்டிற்கும் இடையில் குழந்தை படும் பாடு சொல்லி முடியாது.

சிறுவர்களின் நியாயமான கேள்விகளுக்கு உத்தரவு சொல்ல வேண்டியது. அல்லது உத்தரவு சொல்ல பிரயாசைப்படவேண்டியது பெரியவர்களின் கடமை. பூரணமான விடை கொடுக்க முடியாது தான். ஏனெனில் குழந்தைகளின் அறிவு மிகவும் சொற்பம். அந்த அளவுக்கே நமது விடையும் அமைந்திருந்தால், அதுவே போதும். இன்னும் கொஞ்சம் வயதானபின், குழந்தையின் அறிவு அதிகப்படும் போது, அதற்கு ஏற்றபடி நமது விடைகளின் தரத்தையும் உயர்த்திக்கொள்ளலாம். ஒன்றை நாம் மறந்து போகக்கூடாது. அதாவது, கேள்வி கேட்கும் குழந்தைகளை அதட்டி, அவர்களைப் பதுங்கின பொம்மைகளாக ஆக்கிவிடக் கூடாது. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பெற்றோர்களால் அல்லது மற்றவர்களால் தகுந்த உத்தரவு சொல்ல இயலாவிட்டால், தங்கள் அறியாமையைப் பிள்ளைகளிடம் ஒப்புக்கொள்வது தான் உசிதம். இப்படிச் செய்வதால், குழந்தையின் பார்வையில் தங்களுடைய தன்மானம் அல்லது கௌரவம்

குறைந்துவிடும் என்று நினைப்பது தவறு. உண்மையைச் சொன்னால், இப்படிப்பட்ட பதிலைக் கேட்கும் குழந்தை, சமுத்திரத்தை ஒத்த கல்வியின் விஸ்தாரம் தன் பெற்றோர்களால் அல்லது பெரியவர்களாலும் கூட அறிந்துகொள்ள முடியாத அளவுக்குப் பரவியிருக்கின்றது என்பதை உணர்ந்து கொள்ளும். இதற்குப் பதிலாக, பெற்றோர் அல்லது மற்றோர் ஏதோ கடமைக்கென்று தப்பும் தவறுமான, அரைகுறையான விடைகளை அசிரத்தையாகக் கூறி, அச் சமயத்தில் குழந்தைகளை ஒரு வேளை சமாதானப்படுத்திவிட்டாலும், அத்துடன் தொல்லை விட்டது என்று சொல்வதற்கு இல்லை. ஏனென்றால் இன்னும் கொஞ்சக் காலத்தில் குழந்தையின் அறிவு விசாலித்து, அன்று கேட்ட கேள்விகளுக்கு உண்மையான பதிலை அறிந்து கொள்ளக்கூடிய திறன் வரும். அப்பொழுது குழந்தைக்குத் தன் பெற்றோர் அல்லது பெரியோரைப் பற்றி என்ன அபிப்பிராயம் உண்டாகும்? சற்று சிந்தித்துப் பாருங்கள்.

மாணுக்கனுக்கோ மேலும் மேலும் காரியங்களை அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசை இருப்பது மிகவும் நலம். பஸ் டிரைவருக்குப் பக்கத்தில் அமர்ந்து பிரயாணம் செய்யும் ஒரு பையன் தன் முன் அனேக கடிகாரங்களைப் போன்ற கருவிகளைப் பார்க்கிறான், அவைகளில் ஒன்றைச் சுட்டிக் காட்டி, "இது என்ன?" என்று கேட்கிறான். டிரைவர் நல்லவராய் இருந்தால், சற்றும் கோபப் படாமல், "வேகமானி" என்று சொல்லுகிறார். பையனின் அறிவுத் தாகம் தீரவில்லை. "வேகமானி என்றால் என்ன அர்த்தம்?" என்று வினவுகிறான். "இன்ன வேகத்தில் பஸ் ஓடுகிறது என்று காட்டும் கருவி" என்று அந்த மனுஷன் சலிக்காமல் பதில் அளிக்கிறார். இத்துடன் பையன் திருப்தி அடைந்து போவானானால் அவன் அறிவு வளராது. தொடர்ச்சியாய், இக் கருவி எப்படி வேலை செய்கிறது, எப்படி முள்ளும் சக்கரமும் இணைக்கப்பட்டிருக்கின்றன என்னும் இரகசியத்தை அறியும் நோக்கமாய் இன்னும் எத்தனையோ கேள்விகளைக் கேட்டிருக்கலாம். அல்லது பிரயாணம் முடிந்தவுடன், டவுன் புத்தக ஆலயத்திற்குச் சென்று, இத் தத்துவத்தை விளக்கும் புத்தகத்தை இரவல் வாங்கி வேகமானியின் இரகசியத்தை அறிந்து கொள்ளலாம். இது தான் சிறந்த முறை. ஒரு பொருளைப் பற்றி எத்தனையோ கேள்விகளைக் கேட்டு, அவைகளுக்குச் சரியான பதில்களைக் கண்டுபிடிக்க நாம் பிரயாசைப் படும் போது, அறிவு வளர்கின்றது. எப்படி? ஏன்? எவ்வளவு? எவ்விதம்? எப்பொழுது? என்ற கேள்விகளை மாணுக்கன் தாராளமாகவும் கூசாமலும் கேட்க வேண்டும். அத்துடன் நின்று போகாமல், அவைகளுக்குத் தானே விடையளிக்க முயற்சி செய்யவும் வேண்டும்.

—"நல்வழி"

# கல்வியை இலவசமாக்க வேண்டாம்!

●

முன்னாள் மத்திய கல்வியமைச்சர் டாக்டர் திருகுணசென் அவர்களிடம் இலவசக்கல்வி முறைபற்றி "Caravan" பத்திரிகையின் சார்பாக பின் குறிப்பிட்டுள்ள கேள்வியைக்கேட்டபொழுது அவர் அளித்த பதிலின் சுருக்கம் தமிழில் தரப்பட்டுள்ளது. (ஆதாரம்: Caravan 1969—மார்ச்—(II issue) வெளியீடு.

**கேள்வி:** அண்மைக் காலத்தில் கேரள அரசாங்கம் உயர் செகண்டரி கல்வியை (Higher Secondary Stage) இலவசமாக்கியுள்ளது. உயர் செகண்டரி கல்வியை இலவசமாக்கியது தேவையானது தானா! நாட்டின் முன்னேற்றத்திற்கு அவசியம் தானா!

**டாக்டர் திருகுணசென் அவர்களின் பதில்**

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது செகண்டரி கட்டத்திலும், உயர் செகண்டரி கட்டத்திலும் கல்வியை இலவசமாக்குவது தேவையில்லை எனக் கருதுகிறேன். மேலும் பணம் கொடுத்துப் படிக்க வைக்க வசதியுடையவர்கள் தொடர்ந்து பணம் கட்டிக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தாகும். நான் இலவசக் கல்வி முறையை எதிர்ப்பவன் அல்ல. ஆரம்பக் கல்வி முறை நாடு முழுதும் இலவசமாகவும், கட்டாயமாகவும் இருக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். தற்பொழுதுள்ள கல்வி முறையை சீர்திருத்துவது நமது முக்கிய கடமையாகும்: ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி அளித்தல், தளவாடங்கள், பாடப் புத்தகங்கள் ஆகியவற்றில் நமது கவனம் முழுமையாக செயல்பட வேண்டும். இவற்றை வழங்க நமக்கு நிதி மிக அதிகமாகத் தேவைப்படுகிறது.

எனவே தான் என்னுடைய கல்வி இலாகா செகண்டரி கல்வியை இலவசமாக்க வேண்டாமென மாநில அரசுகளுக்குப் புத்தி கூறி வருகிறது. எல்லோருக்கும் இலவசக் கல்வி என்பதைவிட வசதியும், வாய்ப்பும் குறைவாயுள்ள ஏழை மாணவர்களுக்கு இலவச ஸ்காலர்ஷிப்புகள் வழங்கலாம் எனக் கருதுகிறேன். மகாராட்டிய மாநிலத்தில் இன்று கூட 87% இலவசக்கல்வி பெறும் வாய்ப்புகள் பெறுகின்றனர். மீதமுள்ள 13% கட்டும் சம்பளப் பணம் மட்டும் ஒரு ஆண்டிற்கு ஆறு கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. எனவே இயல்பாகவே கிடைக்கும் இந்த ஆறு கோடி ரூபாயை நாம் ஏன் இழக்கவேண்டும் என்பது தான் என் கேள்வி. இவ்வாறு கிடைக்கும் வருவாயைக் கொண்டு நாட்டின் கல்வி முறையை மேலும் சிறப்படையச் செய்யலாம்.

அரசாங்கத்தின் நிதி யுதவியைப் பெருமல் சம்பளம் வசூலிக்கும் பள்ளிகளின் ஒரு குறிப்பிட்ட சத விகிதம் சப்பளமின்றிப் படிக்கும் மாணவர்களையும் கட்டாயமாக சேர்த்துக் கொள்ளச் செய்வதன் மூலமும் ஓரளவிற்கு இலவசக் கல்வி முறையை அமுல் நடத்த லாம். சுருக்கமாகக் கூற வேண்டு மானல் என்னுடைய கருத்து பின் வருவனவாகும் :—

1. ஆரம்பக் கல்வி நாடு முழுவதும் இலவசமாக்கப்பட வேண்டும்.

2. செகண்டரி கல்வி இலவச மாக்கப்படக் கூடாது. ஆனல் வசதியும் வாய்ப்பும் இல்லாத ஏழை மாணவர்களுக்கு மட்டும் இலவசமாக்கப்பட வேண்டும்.

3. உயர் செகண்டரி கல்வி எந்தக் கட்டத்திலும் இலவசமாக் கப்படக் கூடாது.

---

# "என்னுடைய சோஷலிஸம் இறக்குமதியானதல்ல"

## 'முற்போக்காளர்'களுக்கு நிஜலிங்கப்பா பதில்

"முற்போக்காளர்க்கு" என்று சொல்லிக் கொள்ளும் சில மெம்பர் களுக்கு திரு எஸ். நிஜலிங்கப்பா சரியான பதில் கொடுத்தார்.

அவர்களைப் போலவே தானும் சோஷலிஸ்ட் தான் என்ருர். ஆனல் தன்னுடைய சோஷலிஸம் இந்திய ரகத்தைச் சேர்ந்தது என்று கூறி, மறைமுகமாக கம்யூனிஸ்ட் சோஷலிஸத்தின் முகத்தில் அறைந்தார்.

மகாசபையில் அவர் நிகழ்த்திய முடிவுரையில் தன்னுடைய நிலை மையை அவர் தெளிவாக்கினர்.

ஏகபோக உரிமைகளை நாம் ஆதிகரிக்கவில்லை : சர்க்கார் துறை யையும் எதிர்க்கவில்லை. என்னு டைய உரையைப் பற்றிக் கடும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. அதைப் பற்றி எனக்கு வருத்த மில்லை. மாற்றுக் கருத்துக்களை நான் வரவேற்கிறேன். நம் முடைய மனச்சாட்சியின்படி நாம் நடக்கா விட்டால் மக்களுக்குச் சேவை செய்ய முடியாது.

நான் சோஷலிஸ்ட் அல்ல வென்று சிலர் கூறுகிருர்கள். நான் முழுக்க முழுக்க சோஷலிஸ்ட் தான். ஆனல், என்னுடைய சோஷலிஸம் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதல்ல. என்னுடைய சோஷலிஸம் இந்திய ரகத்தைச் சேர்ந்தது. என்னு டைய சோஷலிஸம் முற்றிலும் இந்திய மயமானது

எல்லோரும் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். எல்லோ ருக்கும் சமவாய்ப்புகள் கிடைக் கும்படி செய்ய வேண்டும். குறிப்

யாக சிறு விவசாயிகளுக்கும், சிறு தொழில்காரர்களுக்கும் உதவி யளிக்க வேண்டும். அவர்கள் தம்மைத் தாமே நம்பி தொழில் நடத்த வேண்டும். இது தான் என்னுடைய சோஷலிஸம்.

நான் மைசூர் முதல் மந்திரியாக இருந்தபோது, சர்க்கார் துறையில் ரூ. 7000க்குச் சிறிய மோட்டார் உற்பத்தி செய்து தருவதாகச் சொன்னேன். இது ஏகபோக உரிமைக்காரகளுக்கு உதவி செய்வதா? (கரகோஷம்) என்ன காரணத்தினலோ மத்திய சர்க்கார் இதை நிராகரித்து விட்டார்கள் என்ருர்.

கட்சியில் கட்டுப்பாட்டின் அவசியத்தையும் திரு. நிஜலிங்கப்பா கண்டிப்பாக வற்புறுத்தினர்.

கட்சியைக் கட்டி வளர்ப்பதற்காக ஆயிரக் கணக்கானவர்கள் எவ்வளவோ தியாகங்கள் செய்திருக்கிருர்கள். நான் காங்கிரஸ் அக்ராசனராயிருக்கும் வரையில் கட்டுப்பாட்டைகாப்பாற்றுவேன். வெறும் கோஷங்களில் பிரயோஜன மில்லை. கிராமங்களுக்குச் சென்று காங்கிரஸின் சாதனைகளை விளக்கிச் சொல்லுங்கள்' என்ருர்.

சர்க்கார் துறை நிறுவனங்களைக் குறை கூறியது பற்றியும் அவர் விளக்கினர். உற்பத்தி சக்தி பயன்படுத்தப்படாமல் கிடப்பதையே நான் குறிப்பிட்டேன். இந்தக் கண்ணேட்டத்துடனேயே எனது உரையைப் பார்க்க வேண்டும். இது சர்க்காரை பாதிப்பதாயிருந்தால், அது என் திடமான நம்பிக்கை என்றுதான் நான் சொல்ல முடியும்.

நம்மில் சிலருக்குப் பதவி வெறி பிடித்துவிட்டது. காங்கிரஸ்காரர்கள் லட்சிய உணர்வை இழந்து விட்டார்கள் என்று திரு. நிஜலிங்கப்பா கூறினர்.


## ஏஜெண்டுகள் தேவை

தமிழ்நாடு, தாலுக்கா அல்லது ஜில்லா வாரியாக எய்டட் ஆரம்பப் பள்ளிகள் Elementary Schools, நடுத்தரப் பள்ளிகள் Middle Schools, உயர்நிலைப் பள்ளிகள் High Schools, தலைமை ஆசிரியர்கள், நிர்வாகிகள் இவர்களைச் சந்தித்து நாங்கள் வெளியிட்டுள்ள பாடப் புத்தகங்களை வைக்கும்படி சிபார்சு செய்து ரூ. 2,000-க்குக் குறையாமல் ஆர்டர் வாங்கி அனுப்ப அனுபவமுள்ள ஏஜெண்டுகள் தேவை. அனுபவமுள்ள ஆசிரியர்கள் நபர்கள் மனுசெய்து கொள்ளவும். தக்க ஊதியம் உண்டு. மற்ற விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

*மானேஜர்,*

**அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,**

*ஆரம்பக்கல்வி நிலையம்*

*94-95, புதுத்தெருவு, மண்ணடி, சென்னை-1.*

# தொழிலாளர் உரிமையா? நாட்டு நலனா?

அர்த்தமற்ற காரணங்களுக்காக வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள் தண்டிக்கப்படுவார்கள். தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் சமாதானஒப்பந்தம் ஆன பிறகும் தொழிலாளர்கள் திருப்தியடையாமல் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்வார்களானால் அவர்கள் சம்பளத்தைப் பறிமுதல் செய்தல் முதலான தண்டனைகளை விதிக்க நேரிடும்... இப்படிப் பல அம்சங்கள் கொண்ட மசோதா பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு வந்துள்ளது. இப்படியொரு மசோதாவைத் தயாரித்த பிரிட்டிஷ் பிரதம மந்திரி வில்ஸனின் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். தொழிற் கட்சியைச் சேர்ந்த பிரதமராக இருந்து கொண்டு அவர் கொண்டு வந்துள்ள இந்த மசோதா தொழிற் சங்கங்களிடையே பரபரப்பையும், எதிர்ப்பையும் கிளப்பி விட்டிருக்கிறது. தொழிற்கட்சி பார்லிமெண்டில் நிறைவேறத் தொழிற்கட்சி அங்கத்தினர்கள் முழு ஆதரவு தரவில்லையானால், தாம் பிரதம மந்திரிபதவியை ராஜினாமாச் செய்துவிடவும் தயாராக இருப்பதாக வில்ஸன் பதிலுக்கு மிரட்டியிருக்கிறார்.

இப்படி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தொழிற்கட்சி அங்கத்தினர்களிடையேயும், பெரிய எதிர்ப்பும் பரபரப்பும் கிளப்பியுள்ள மசோதா கூறுவதுதான் என்ன ?

சமீப காலத்தில் பிரிட்டிஷ் தொழிற் கூடங்களில் எல்லாம் மிகவும் அற்பக் காரணங்களுக்காகத் தொழிற் சங்கங்கள் வேலை நிறுத். தங்கள் நடத்தி வருகின்றன.

ஒரு தொழிலாளி தலை முடியை நீளமாக வளர்த்துக் கொண்டு வந்தாராம். யந்திரங்களுக்கிடையில் வேலை செய்யும்போது தலைமுடி சிக்கி உயிராபத்தான நிலையை உண்டாக்கலாம் என்று தலைமுடியை வெட்டிக் கொண்டு வருமாறு தொழிற்கூட அதிகாரி கூறினாராம். உடனே அத்தனை தொழிலாளர்களும் வெளியேறி வேலை நிறுத்தம் தொடங்கிவிட்டார்களாம்.

இப்படிக் காரணமில்லாத காரணங்களுக்காகத் திடீர் திடீர் என்று வேலை நிறுத்தங்கள் செய்யப்படுவதால் உற்பத்திப் பெருக்கம் தடைப்பட்டு பிரிட்டிஷ்பொருளாதார நிலை மிகச் சங்கடமான நிலைக்கு வந்திருக்கிறது.

பிரிட்டிஷ் பொருளாதார நிலை சீர்படவேண்டுமென்றால் இந்த முறையற்ற வேலைநிறுத்தங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் பிரிட்டிஷ் பிரதமர் வில்ஸன். தொழிற்சங்க உரிமைகளைவிட, தொழிற் கட்சியின் பிராபல்யத்தைவிட நாட்டின் பொருளாதார நலனே முக்கியம் என்கிறார் வில்ஸன்.

—கல்கி

# கல்வித்துறைச் செய்திகள்

## 34 வறட்சி தாலூக்காக்களில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு

### *தமிழக அரசின் விசேஷத் திட்டம்*

தமிழ் நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள 9 ஜில்லாக்களின் 34 தாலுக்காக்களில் கோடை விடுமுறை மாதமாகிய மே மாதத்திலும் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்பதென்று சர்க்கார் தீர்மானித்துள்ளது. இந்த மாதம் மதிய உணவு பெற்று வரும் பள்ளிக் குழந்தைகள் அனைவரும் மே மாதத்திலும் இந்த நன்மையை அடைவார்கள்.

இந்த விஷயமாக செகண்டரி கல்வி டைரக்டர் தமிழ் நாட்டில் உள்ள பள்ளிக்கூடங்களுக்குச்சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். மே மாதம் விடுமுறை மாதமாகையால், மதிய உணவுத் திட்டத்தை அமல் நடத்த வேண்டியது அவசியம் என்றும் ஒவ்வொரு பள்ளியின் தலைமை ஆசிரியராவது இந்தத் திட்டத்தை அமல் நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கல்வி டைரக்டர் தனது சுற்றறிக்கையில் தெரிவித்திருக்கிறார். மதிய உணவு திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை மே மாதத்தில் வகிக்கும் தலைமையாசிரியர்களோ அன்றி ஆசிரியர்களோ கடமையாற்றியதாகக் கருதப்படுவார்கள் என்றும் அவர்களுக்குத் தகுந்த 'ரஜா' அவர்களுடைய ரஜா கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும் டைரக்டர் கூறியுள்ளார்.

### வழக்கம்போல சப்ளை

டைரக்டர் தனது சுற்றறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது: 'கெயர்' ஸ்தாபனத்தின் மூலமாக மே. மாதம் 31 தினங்களிலும் கோதுமை, எண்ணெய் முதலிய பொருள்கள் வழக்கமாக சப்ளை செய்கிறவர்களிடமிருந்து கிடைக்கும். ஒவ்வொரு குழந்தைக்கும் சர்க்கார் 3 பைசா மான்யம்தரும். இத்துடன் 'கெயர்' உதவியும் கிடைக்கும். இவற்றைக்கொண்டு உணவைத் தயாரித்து ஒவ்வொரு நாளும் குழந்தைகளுக்கு 3 பைசா மான்யத்தை முன்னதாக எல்லாப் பள்ளிகளுக்கும் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

140 பஞ்சாயத்து யூனியன்கள் உள்ள கீழ்க்கண்ட தாலூகாக்களில் விடுமுறை மாதமாகிய மே மாதத்தில் விசேஷ மதிய உணவு திட்டம் அமலுக்கு வரும் :—

வட ஆற்காடு ஜில்லா ; திருப்பத்தூர் தாலூகா.

தெ.ஆ. ஜில்லா : விருத்தாசலம் தாலுகா.

சேலம் ஜில்லா: ஓமலூர், சங்கரி, திருச்செங்கோடு, நாமக்கல்.

தர்மபுரி ஜில்லா : ஹோசூர், கிருஷ்ணகிரி, ஹரூர். தர்மபுரி தாலுகாக்கள்.

கோவை ஜில்லா: தாராபுரம், பல்லடம், அவினாசி தாலுகாக்கள்.

மதுரை ஜில்லா : திண்டுக்கல், பழனி, திருமங்கலம் தாலுகாக்கள்.

திருச்சி ஜில்லா : பெரம்பலூர், உடையார்பாளையம், (ஜெயங்கொண்டான்), கரூர், குளத்தூர், ஆலங்குடி, திருமயம் தாலுகாக்கள்.

திருநெல்வேலி ஜில்லா : சங்கரன் கோவில், கோவில்பட்டி, நாங்குனேரி, திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் தாலுகாக்கள்.

## இந்தியாவில் படிக்காதவர்கள் தொகை 35 கோடி

சுமார் 34·9 கோடி இந்தியர்கள் இன்று எழுத்தறிவு பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

மத்திய கல்வி மந்திராலயம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது. எழுத்தறிவு பெற்றவர்களின் சதவிகிதம் 1951-ல் 17 சதவிகிதமாக இருந்தது. 1968-69ல் அது 33 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. என்றாலும் எழுத்தறிவற்றவர்கள் இவ்வளவு அதிகமாக இருப்பதற்குக் காரணம் ஜனத்தொகைப் பெருக்கமே என்று கூறப்படுகிறது.

பெண்களிடையேயும், கிராமப் பகுதிகளில் உள்ளவர்களிடையேயும் எழுத்தறிவு பெற்றவர்கள் மிகவும் குறைவு.

இன்னும் 10 அல்லது 15ஆண்டுகளுக்குள் எழுத்தறிவின்மையைப் பூரணமாக அகற்றவில்லை என்றால் பிரச்னை மேலும் பயங்கரமாகக் கூடும் என்று கல்வி மந்திராலயம் கருதுகிறது. நாளை ஆரம்பமாகவிருக்கும் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் மகாநாட்டில் பரிசிலனை செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு குறிப்பில் இந்த விவரங்கள் தரப்பட்டுள்ளன.

## மேலும் பத்தாயிரம் பி. டி. ஆசிரியர்கள் தேவைப்படலாம்

4வது திட்ட காலத்தில் உபரியாக 10,000 பி. டி. ஆசிரியர்கள் தேவைப் படுவார்கள். செகண்டரி பள்ளிகளில் கூடுதலாக மாணவர்கள் இருப்பார்கள், ஆகவே புதிய நிலைமையைச் சமாளிப்பதற்குக் கூடுதலாக 10 ஆயிரம் ஆசிரியர்கள் தேவைப்படலாம். நிலைமையைச் சமாளிக்க ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றைப் புதியதாக ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்போதுள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் பலப்படுத்தப்படும். அதாவது அவற்றில் கூடுதலாகப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும்.

செகண்டரி பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1960-61-ல் 2·68 லட்சம் மாணவர்கள் செகண்டரி பள்ளிகளில் இருந்தனர். ஆனால் 1965-66ல் 14, 17 வயதுகளில் 5·57 லட்சம் மாணவர்கள் சேர்ந்திருந்தனர். இப்போது இந்த எண்ணிக்கை 7 லட்சமாக உயர்ந்திருக்கக் கூடும். 4வது திட்ட காலத்தில் செகண்டரி பள்ளிகளில் மேலும் 7 லட்சம் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருப்பார்கள். ஆகவே கூடுதலாக 10 ஆயிரம் பி.டி. ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள்.

அதிகப்படியான பி. டி. ஆசிரியர்களைத் தயாரிப்பதற்கு இப்போதுள்ள பி டி. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் பலப்படுத்தப்படும். மேலும் 1 பி.டி. பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்போதுள்ள பி. டி. ஆசிரியர்களின் திறமையை அபிவிருத்தி செய்வதற்கு அவர்களைப் பட்ட பிற்கால ஆராய்ச்சிப் படிப்புக்கு (போஸ்ட் கிராஜுவேட்) அனுப்ப உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

## பள்ளிகளுக்கிடையில் பாகுபாடு இல்லை

### *தனியார் நிர்வாகத்துக்கு முதல்வர் உறுதி*

அறிவியல் விஞ்ஞானத்துறையில் மாணவர்களின் கல்வி அறிவு ஓங்க வேண்டும். நீண்ட காலமாக மக்களிடையே நிலவி வருகிற மூடநம்பிக்கைககள் நீங்கி சமூகம் சீர் திருந்த மாணவர்களின் கல்வியறிவு பயன்படவேண்டும் என்று முதலமைச்சர் திரு மு. கருணாநிதி கூறினார்

திருவல்லிக்கேணியில்உள்ளகெல்லெட் உயர்தரப் பள்ளியின் 71-வது ஆண்டு விழாவும், புதிதாகக் கட்டப்பட்ட விஞ்ஞான பிரிவுக் கட்டிடத் திறப்பு விழாவும் கொண்டாடப்பட்டன. புதுக் கட்டிடத்தைத் திறந்து வைத்து முதலமைச்சர் பேசுகையில், பழம் பெருமைகளையே நாம் பேசிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை என்று குறிப்பிட்டார். ஆசிரியர்களிடம் மாணவர்களுக்கு மரியாதையும் அடக்கமும் வரவேண்டுமென்றார்.

பள்ளிகளுக்கு சர்க்காரின் உதவி பற்றி அவர் குறிப்பிடுகையில் தனியார் பள்ளிகளை அரசாங்கம் "கீழ் ஜாதி" போல் பாவித்து நடத்துமோ என்று அச்சம் தேவை இல்லை என்றும், அரசாங்கத்தைப் பொறுத்தவரை, கல்வி நிலையங்களிடையே பாகுபாடு இல்லை என்றும் உறுதி கூறினார்.

சென்னை பிஷப் அர்ச் லெஸ்லி நியூபிகின் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

## கல்வியின் அளவு பெருகி, தரம் குறைகிறதே!

### *ஏ. எல். முதலியார் வருத்தம்*

இன்று கல்வியின் அளவு பெருகி தரத்தைக் குறைத்து விட்டது.

கல்வியில் அரசியல் புகுந்து, மேலோங்கி விட்டது என்று சென்னை சர்வ கலாசாலை உப அத்யட்சகர் டாக்டர் ஏ. எல். முதலியார் இங்குக் கூறினார்.

ஞாயிறன்று இங்கு ஒரு மாதர் கல்லூரியின் புதுக் கட்டிடத்தைத் திறந்து வைத்து, அவர் பேசுகையில் இலவசக் கல்வியைப் பற்றிக் குறிப்பிட்டு, சர்வகலாசாலைக் காரர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் இது குறித்து மகிழ்ச்சியடைந்திருப்பதாகக் கூறினார்.

கல்வி இலவசமானால், கல்வியைப் பற்றி மாணவர்களோ அல்லது பெற்றோரோ யாரும் கவலைப்பட மாட்டார்கள் என்றார். ஜனநாயகத்துக்கு அரசியலினால் ஆபத்து அல்ல; படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்போரால்தான் ஆபத்து உண்டாகும் என்று டாக்டர் முதலியார் எச்சரித்தார்.

உற்பத்தி அம்சமில்லாத வேலைகளை விட உற்பத்தி அம்சமுள்ள தொழில்களை மேற் கொள்ளுமாறு அவர் மாணவர்களைக் கேட்டுக் கொண்டார். வெறும் பட்டதாரிகளை விட டெக்னீஷியன்கள் இரண்டு மூன்று மடங்கு அதிகம் சம்பாதிப்பதால் தொழிற் கல்விகளில் சேர்ந்து பயிலுமாறு டாக்டர் முதலியார் யோசனை கூறினார்.

## குழந்தைகள் கெடுவதற்குப் பெற்றோரே காரணமாம்!

பெற்றோர்கள் தங்களுடைய நடத்தையில் எச்சரிக்கையாக இருந்தால் சிறுவர்கள் குற்றவாளிகளாகாமல் தடுப்பதற்கு பெரும் அளவில் அது உதவிகரமாக இருக்கும் என்று சென்னையில் ஒரு கருத்தரங்கில் கூறப்பட்டது.

"இளங் குற்றவாளிகளின் புனர் வாழ்வு" என்ற கருத்தரங்கை இந்திய சமூக நலக் கவுன்சிலின் தமிழ் நாட்டுக் கிளை ஏற்பாடு செய்திருந்தது. குடிகார தந்தை, ஒழுக்கம் தவறிய தாய், மோசமான சூழ்நிலை ஆகிய காரணங்களினால் தான் பெரும்பாலான சிறுவர்கள் குற்றவாளிகளாகிறார்கள் என்று கருத்தரங்கில் பேச்சாளர்கள் கூறினார்கள்.

பல சந்தர்ப்பங்களில் பிள்ளைகளை விடப் பெற்றோர்களே திருத்தப்பட வேண்டிய நிலைமையில் உள்ளார்கள் என்றும் கூறினார்கள்.

குழந்தைகளின் குணம் குடும்ப பரம்பரையை யொட்டி ஏற்படுவது இல்லை என்றும், சுற்றிலும் உள்ளவர்களின் தீய பழக்கங்களும், சமூக விரோத நடத்தையுமே குழந்தைகளின் மனத்தைக் கெடுக்கின்றன என்றும் ஒருவர் கூறினார்.

சென்னை மேல்சபைத் தலைவர் எம். ஏ. மாணிக்கவேலு தலைமை வகித்தார்.

# செய்தித் தொகுப்பு

## 5 வயது டைப்பிஸ்ட்!

ஐந்தே வயதில் டைப்ரைட்டிங் கற்றுக்கொள்ள முடியுமோ? ஓ, நிச்சயமாக முடியும்! அமெரிக்காவில் ஐந்து வயதுச் சுட்டிப் பயல் ஒருவன் இந்த சாதனையைச் செய்திருக்கிறான். மின்னியல் (எலெக்ட்ரானிக்) கருவிகளின் மூலம் எழுதப் படிக்கத் தெரிந்து கொண்டு, டைப்ரைட்டிங் கற்க முற்பட்டானாம், அந்தப் பையன். அவன் படிப்பு எப்பொழுது துவங்கியது என்று நினைக்கிறீர்கள்? சரியாக மூன்ருவது வயதில்! மின்னியல் கருவிகளின் உதவியால் இந்தச் சாதனையை எந்தக் குழந்தையும் சாதிக்க முடியும் என்று விஞ்ஞான அறிஞர்கள் கூறுகிருர்கள்.

## அவர்கள் வாழ அன்னை நிலை காணீரோ?

ஆரிய சமாஜத்தைத் துவக்கிய தயானந்த சரஸ்வதி ஸ்வாமிகள் விக்கிரக ஆராதனையை எதிர்த்தார். அவர் ஒரு நாள் ஒரு கோயில் வழியாகப் போய்க் கொண்டிருந்தார்.

கோபுரவாசலுக்கு எதிரில் வந்த போது அவர் தலை குனிந்தார். அவர் கோயிலுக்கு முன் தலை குனிவதைப் பார்த்த பகைவர் சிலர், "விக்கிரகத்தைக் கும்பிடக் கூடாது என்னும் சாமியார் ரகசியமாகத் தலை வணங்குகிருரே!" என்று உரக்கக்கூறிக் கேலி செய்தனர்.

துறவி தயானந்தர் அவர்களை நோக்கி, எள்ளிச் சிரித்தார். "அதோ, அந்தச் சிறு பெண்ணைக் கண் திறந்து பாருங்கள். உடுக்க உடை இல்லாமல் வாடும் அவளுடைய அவலநிலை உங்கள் கண்ணில் படவில்லையா? இப்படி நாதியற்றுத் தவிக்கும் நம் மக்களின் கொடியநிலையை நினைத்துக் குமைந்தேதான் தலை குனிந்தேன், சிறு குழந்தையானாலும், பெரிய ஸ்திரியானாலும் பெண்கள் எல்லாரும் பாரதத் தாய்க்கு சமமானவர்கள். அவர்களை நல்ல வகையில் வைத்துக் கொண்டால் தான், நம் நாடு உலகில் மேன்மைபெறும்" என்று சொல்லி, எதிரே விளையாடிக் கொண்டிருந்த ஏழைப் பெண் குழந்தை ஒன்று ஆடையில்லாமல் நிற்பதைச் சுட்டிக் காட்டிவிட்டு, விடுவிடுவென்று நடந்தார் அவர்.

## மட்டச் சரக்கை சுட்டு எரித்தார்!

ஹனிச்சி யோஷிகாவா என்பவர் புகழ்பெற்ற ஜப்பானிய நூலாசிரியர். அவர் தம் இளமையில் அரிசிக் கடை யொன்றில் வேலை செய்தார். அந்தக் கடை முதலாளி வாடிக்கைக்காரர்களை ஏமாற்றி வந்ததைக் கண்ட அவர், அங்கே வேலை செய்யப் பிடிக்காமல் விலகினர். பிறகு அவர் இனிப்புகள் விற்கும் கடையில் வேலைக்கு அமர்ந்தார். இதன் முத

லானி இனிப்புகளில் கலப்படம் செய்து வந்தார். ஆகவே அதையும்விட்டு வெளியேறினர். அடுத்த படியாக அழகாக அழகுப் பொருள்கள் விற்கும் விற்பனையாளர் ஒருவருக்கு உதவியாளராக வேலை செய்தார். அந்த அழகுப் பொருள் விற்பனையாளர் அளவுக்கு மீறிய சூதுவாது நிரம்பியவர் என்பதையும் மட்டப் போலிகளை உயர்ந்த பொருள்களாகச் சொல்லி விற்பவர் என்பதையும் கண்டுபிடித்தார் அவர். எனவே, இதற்கும் தலை முழுக்குப் போட்டுவிட்டு தாமே சொந்தத்தில் ஒரு புத்தகக் கடை வைத்து நடத்தினர்; சில காலத்திற்குப் பிறகு பிரபல நூலாசிரியராகவும் ஆனர்.

அவருடையை முயற்சியின் காரணமாக ஜப்பானியவர்த்தகத்திற்கு ஏற்பட்டிருந்த கெட்ட பெயரைக் களைவதற்காகவும், வியாபாரத்தில் கையாளப்பட்ட கொடிய பழக்கங்களைத் தடுப்பதற்காகவும் ஒரு பத்தாண்டுக் காலத்துக்குள் ஆறுயிரம் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இந்தச் சங்கங்களின் அங்கத்தினர் சில சமயங்களில் மட்டரகச் சரக்குகளைக் கடையிலிருந்து கவர்ந்து பொது இடத்தில் எரித்தார்கள். வர்த்தகத் தூய்மை ஏற்படுத்துவதற்காக அவர்கள் இப்படிப்பட்ட ஒரு கூட்டு முயற்சியில் ஈடுபட்டனர்.

இது இன்று நேற்றல்ல; 1880-1890 ஆண்டு காலத்திலேயே நடந்த கதை!

ஆதாரம் - "புல்லட்டின் டிலாஸோக்"

## வெயில் எத்தனை டிகிரி?

"அப்பப்பா வெயில் கொளுத்துகிறதே!...எத்தனை டிக்ரி' இருக்குமோ?" என்று புலம்பும்குரலைப் போன இடமெல்லாம் கேட்கலாம் இந்தக் கடுங் கோடையில். வெயிலின் வெப்பம் எத்தனை டிக்ரி என்பதைக் கண்டுபிடிக்க இன்றியமையாத சாதனமான உஷ்ணமானியின் மீது வானிலை ஆராய்ச்சியாளர்கள் கவனத்தைப் பதிக்கின்றனர். உடனே வெயிலின் உஷ்ண அளவு தெரிகிறது. அதைப் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்புகின்றனர். தினமும் பத்திரிகைகளில் இவ்வளவு டிக்ரி வெயில் என்பது வெளியாகி விடுகிறது.

ஆனல், உஷ்ணமானி இல்லாமலும், வெப்ப அளவைக் கணக்கிட்டு அறிய முடியும்! வெறும் வெட்டுக் கிளியைக் கொண்டு, வெயில் அளவைக் கூறிவிட முடியும்!! எப்படி தெரியுமா?

வெட்டுக்கிளி எந்நேரமும் ஓர் ஒலி செய்துகொண்டே இருக்கும். அப்படி அது பதினைந்து விநாடிகளில் எத்தனை முறை ஒலி எழுப்புகிறதோ, அதை எண்ணிக்கொண்டு அதோடுகூட முப்பத்தேழைக் கூட்ட வேண்டும். இதன் மூலம் கிடைக்கும் மொத்த எண்ணிக்கை எவ்வளவோ, அவ்வளவு டிக்ரீ பாரன்ஹீட் உஷ்ணம் அன்றைய வெயில்!

வெயில் காலத்தில் மட்டுமல்ல; எந்தக் காலத்திலுமே, சீதோஷ்ண நிலையை அறிந்துகொள்ள வெட்

டுக்கிளியை இப்படிப் பயன்படுத்த முடியும்!

## தேன்! தேன்! தேன்!

மணப்பெண் இன்ப மயக்கத்தில் இருக்கும் சமயத்தில், அவள் முகத்திலும் மார்பகத்திலும் தேனை அள்ளிச் சொரிந்தால் எப்படி இருக்கும்? அப்பொழுது அவள் காதலன் அவளை அணுகினால் எப்படிப் பட்ட இனிமையைச் சுவைப்பான்.

...புது மணப்பெண்ணின் மலர் முகத்திலும் மார்பகத்திலும் தேனைச் சொரிந்து, மணமகன் அவளை வண்டாக மொய்க்கும்படி நாட்டவர்கள் கடைப்பிடிக்கிறார்கள், மணமான புது தம்பதிக்கு தேனை உணவாகப் படைக்கும் பழக்கத்தை டியூட்டானியர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள்.

கிரேக்க நாட்டில், இதுவே இன்னொரு முறையில் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒரே கோப்பையில் தேனை வைத்து, அந்தத் தேனைப் புதிதாக மணம் புரிந்த ஆணும் பெண்ணும் அருகருகே இருந்து அருந்தும்படி செய்கிறார்கள்.

ஸ்பார்ட்டா நகரத்து மாமியார் தன் மருமகளை வீட்டுக்கு வரவேற்கும்போக்கு மிகவும் அருமையானது. பொருள் பொதிந்தது. புக்ககத்தில் முதன் முதலாக அடி எடுத்துவைக்கும் மருமகளை வாயில் நிலையிலேயே நிறுத்திவைத்துவிட்டு அவளுடைய மாமியார் தேன் நிறைந்த கிண்ணத்துடன் அவளை நோக்கி வருவாள். பிறகு அந்த மாமியார், தன் மருமகளின் உதடுகளில், தேனைத் தடவுவாள்; 'வா, என் மருமகளே!' என்று, தேனின் இனிமையுடன் வரவேற்று உள்ளே அழைத்துச் செல்வாள். மாமியாரும் மருமகளும் ஒருவருக்கொருவர் தேன் போன்ற இனிமையுடனும், இசைவுடனும், இழைவுடனும் இணைந்து பழக வேண்டும் என்பதைக் குறிக்கிறதாம் இந்தச் சடங்கு!

சீனா. ஜப்பான், பாரசீகம் போன்ற நாடுகளிலும் புது மணத் தம்பதிகளுக்கும் முதலில் தேனமுது ஊட்டும் பழக்கம் இருந்து வந்ததாம்.

## 10-வது, 11-வது வகுப்புகளில் தேர்வுப் பாடங்கள் பற்றிக் கல்வி அமைச்சர்

தமிழ் நாட்டில், பத்தாவது, பதினொராவது வகுப்புகளுக்கு தேர்வுப்பாடங்களை கொணர்ந்தது "கொள்கை அளவில் தவறு"! என்று தனிப்பட்ட முறையில் தாம் கருதுவதாகக் கல்வி அமைச்சர் செ. மாதவன் இன்று நிருபர்களிடம் கூறினார்.

(1967-68-ல் பத்தாவது வகுப்புக்குத்தேர்வுப்பாடங்கள்வைக்கப் பட்டன. அடுத்த ஆண்டில் பதினொராவது வகுப்புக்கு அவை விஸ்தரிக்கப்பட்டன. முன்பு இருந்த அரசாங்கத்தின் இடைநிலைக் கல்வி புனரமைப்பு திட்டத்தின் கீழ் இவை கொணரப்பட்டன.)

திருச்சி மாவட்ட ஆசிரியர்கள் சங்கம் பத்தாவது, பதினொராவது

வகுப்புகளில் தேர்வுப் பாடங்களை ரத்து செய்யுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தியிருப்பது அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போது அவர் தமது கருத்தைத் தெரிவித்தார்.

அரசாங்கம் தேர்வுப் பாடங்களை ரத்து செய்யுமா என்று கேட்டபிறகு, இது விஷயமாக ஒருதலைப்பட்சமாக தாங்கள் எதுவும் செய்ய விரும்பவில்லை என்று அவர் பதில் அளித்தார். ஆசிரியர் சங்கங்கள் முதலியவற்றின் கருத்துக்களைப் புரிந்து கொண்ட பிறகு இது சம்பந்தமாக மறு பரிசீலனை எதுவும் செய்யப்படும் என்று அவர் கூறினார்.

# வேனிலும் மேனிப் பொலிவும்

— உத்ரா —

மேனி அழகு, தோற்றத்துக்கு மிகவும் அவசியம். சருமப் பொலிவு தனி கவர்ச்சி. வெயில் காலம் தனிக் கவனத்தைக் கோருகிறது. அதிக செலவு இல்லாமலும், சுலபமாகவும் சருமப் பொலிவைக்காக்க சில வழிகள் உள்ளன.

தினசரி, குளிக்கும் பொழுது, நீரில வேப்பிலையில் நான்கை பறித்துப் போட்டு சிறிது நேரம் கழித்து குளித்தால், உஷ்ண மிகுதியால் பாதிக்கப்படும் சரும நோய்களைத் தடுக்கலாம். கருப்புப் பொட்டு போன்றவைகளும் ஏற்படாது. தொடர்ந்து இதனைச் செய்து வந்தால், நிறமே ஓரளவு சிவக்கும். வேப்பிலைகளைக் கசக்கி அந்த சாறைக் குளிக்கும் நீரில் கலந்து உபயோகிக்கலாம்.

இயற்கையாக வேவறண்ட சருமமாயின், அரைபவுண்டு சாதாரண உப்பை மாவாக எடுத்துக்கொண்டு அத்துடன் 'ஆலிவ்' எண்ணெயைக் கலந்து குழம்பாக்கி சருமம்பூராவும் தடவ வேண்டும். சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரால் சுத்தம் செய்யவேண்டும். அதிக சூடான நீர்பயன்படுத்தக் கூடாது. அது உடலுக்கு ஓய்ச்சலைத் தரும். சுத்தம் செய்தவுடன் குளிர்ந்தநீரில் குளித்தால் ஓர் புத்துணர்ச்சி ஏற்படுவதோடு மேனியில் பொலிவும் ஏற்படும்.

காலையில் சர்க்கரை சேர்க்காத ஒரு கோப்பை எலுமிச்சம் பழரசமோ அல்லது பகலில் ஒரு கோப்பை இளநீரோ தவறாமல் பருகினாலும் சருமப் பொலிவு அதிசயிக்கத் தக்க வகையில் இருக்கும். நல்ல பழங்கள் பொலிவினை உயர்த்தும்.

முகத்தின் பொலிவைப் போற்ற எலுமிச்சை ரசத்தில் சில துளிகளையும் பால் ஏட்டையும் கலந்து தடவி, சிறிது ஊறிச் சுத்தப் படுத்தலாம்.

முக்கியமாக வெயில் காலத்தில் காலையிலும், மாலையிலும் குளிர்ந்த நீரில் முகம் சுத்தம் செய்து நல்ல சந்தனக் கட்டையை உரைத்து அந்தக் குழம்பைத் தொடர்ந்து பூசினாலும் முகத்தில் பளபளப்பும் மென்மையும் ஓங்கியிருக்கும். சந்

தனத்துக்கு சருமப் பொலிவைக் கொடுக்கும் குணம் உண்டு.

வேனில் காலத்தில் வெயில் செல்வதற்கு முன் சந்தன எண்ணெயில் இரு துளிகள் எடுத்துக் கொண்டு, அத்துடன் சில துளிகள் சருமத்தில் தடவினால் சுகந்த மணம் மட்டுமல்ல, எந்த தொத்து வியாதியும் அணுகாது.

எண்ணெய்ப் பசையுள்ள சருமமாயின், பயத்தம் மாவை சில நிமிடங்கள் முகத்தில் நீருடன் 'சாந்துப் பசையாக்கி' ஊறி, குளிர்ந்த நீரால் சுத்தம் செய்யலாம்.

மஞ்சள் உபயோகிக்கத் தயங்காதவர்களாயின், தினசரி படுக்கும் முன் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு மஞ்சளை உரைத்துப் பூசினால் மேனி பொலிவு பெறுவதோடு நல்ல நிறமும் கிடைக்கும். மஞ்சள் நிறத்தைவிரும்பாவிட்டால் கஸ்தூரி மஞ்சளைப் பயன்படுத்தலாம். அதற்கு நிறம் கிடையாது.

முகத்தில், வேனில் காலத்திலும், பட்டுப்போன்ற தோற்றம் ஏற்பட காலையில் இரு துளிகள் நல்லெண்ணெயை எடுத்து இரு துளிகள் நீர் கலந்து, வெண்மை நுரை பொங்கக் குழைத்துப் பூசினாலும் பொலிவு ஓங்கும்.

வேனில் காலத்தில் முக ஒப்பனை கூடுமான வரை கனம் குறைந்ததாக இருப்பது நல்லது. முதலில் முகத்தில் எந்த ஒப்பனைத் தடையுமில்லாமலும், சுத்தம் செய்துவிட்டு, கலமின் லோஷனை லேசாகப் பூசி அதன்மேல் முக ஒப்பனைகளைச் செய்வது ஒப்பனை நீடித்து நிற்க உதவும்.

எந்தக் காரணத்தைக்கொண்டும் ஒப்பனையைக் கலைக்காமல் இரவு படுக்கக் கூடாது. சருமப் பாதுகாப்புக்கு இது முக்கியமாகும். குளிர்ந்த நீரில் முகத்தைச் சுத்தம் செய்து சுத்தமான சந்தனத்தைப் பூசி உறங்கச் சென்றால், பொலிவு மேம்பட வழி உண்டு.

குறித்த காலத்தில் தவறாது எண்ணெய் நீராடலும், சருமப் பாதுகாப்புக்கு முக்கியமாகும். வேனில் காலத்தில், கூடுமானவரை காற்றுப் புகும் ஆடைகளை அணிவதும் கவனிக்க வேண்டியவைகளில் ஒன்று. காற்றுப் புக முடியாத, வேர்வையை இழுக்க முடியாத ஆடைகள் சரும நோயைச் சில சமயங்களில் ஏற்படுத்தி விடும்.

குறித்த நேர சாப்பாடு. அதிக பழங்கள், வெப்ப நேரத்தில் அலையாமை போன்றவைகள் மேனிப் பொலிவுக்கு மிகவும் உதவுபவை. ஒருவரின் ஆரோக்கியமும், அழகும் சருமத்தைக் கொண்டே எடை போடப்படுவதால் அதைக் காப்பதும் அவசியம் தானே!

மற்றும் ஒன்று கூடுமானவரை காபி, தேநீர் அருந்துவதைக் குறைத்துவிட வேண்டும். தினசரி ஒரு நெல்லிக்கனி சாப்பிட்டு வந்தால் ஆரோக்கியமும் பொலிவும் நிரந்தரமாகவே இருக்கும். ஆப்பிளுக்கு இணையான குணம் நெல்லிக்கனிக்கு உண்டு!

மேனிப் பொலிவு மங்கையின் நிறைவு!

—"தினமணி சுடர்"

# காபி பழக்க வரலாறு

*

பல்லாண்டுகளுக்கு முன்னால், காபியைப் பயன்படுத்தியவர்கள் பச்சைக் காபிக் கொட்டைகளை ஜாக்கிரதையாகத் தேர்ந்தெடுத்து அவற்றை வீட்டுக்கு எடுத்துச் சென்று வறுத்து, வேண்டிய போதெல்லாம் கை மெஷின் களில் அரைத்துக் கொண்டார்கள். இன்னமும் கூட பல வீடுகளில் சிறப்பாகத் தென்னிந்தியாவிலுள்ள பல வீடுகளில்—இந்தப் பழக்கம் ஓரளவுக்கு இருந்து வருகிறது. காபியின் தனிச் சுவை அறிந்த சிலரின் வீடுகளிலும் இப்பழக்கம் இருக்கிறது. இன்று காபிக் கொட்டை வறுத்து அரைக்கும் மின்சார இயந்திரங்கள் இருப்பதால், அவற்றில் வறுத்தரைத்த காபிப்பொடியில்தயாரித்த காபியை மிகப் பலர் அருந்துகின்றனர்.

பற்பல பிராண்ட் பெயர்களில் காபி விற்பனையாகிறது. அவற்றைத் தயாரிப்போர் சிறப்பு மிகு அபிவிருத்தி முறைகளையும், சிறந்த விற்பனைத் தோதுகாணும் வழி வகைகளையும், உயர்ந்த வினியோகமுறைகளையும், நல்ல விளம்பர வழிகளையும், சிறப்புறச் செப்பம் செய்யும் முறைகளையும் உபயோகிக்கின்றனர். பத்திரிகைக் காகிதத்தில் 'கட்டித் தருவதற்குப்பதில் எண்ணெய்ப்பசை ஒட்டாத சுத்தமான பைகளில் இப்பொழுது காபிப் பொடி கிடைக்கிறது. நிலைபெற்று பிரபலமான பிராண்ட்பெயர், இப்பொழுது ஒவ்வொன்றுக்கும் இருக்கிறது. தேயிலைகளின் போட்டி இருந்தபோதிலுங்கூட காபி பொடியும் 'இன்ஸிடண்ட்' காபியும் போன்ற காபி தயாரிக்கும்பொருள்கள் பரந்த அளவில் மக்களின் அபிமானத்தைப் பெற்றுள்ளதற்கு இவைதான் காரணம்.

பெரும்பாலும் உபயோகிப்போரின் பழக்கங்களில் மாற்றத்தைத் தோற்றுவிப்பவர்கள் தயாரிப்பாளர்கள் தாம். தங்களுடையதயாரிப்புப் பொருளை அபிவிருத்தி செய்வதன் மூலமும், விற்பனைச் சந்தைஆராய்ச்சியின் மூலமுமாகவே அவர்கள் இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துகின்றனர். காபிக்கு உள்ள வாய்ப்பையும் வளத்தையும் குறித்துச் சமீப காலத்தில் பெருமளவில் வற்புறுத்தி உரைக்கப்பட்டு வருகிறது. ஆகவே எந்த உருவில் கிடைத்தாலும் இது மிக நன்றாக மிகப் பரந்த அளவுபகுதியில் செலாவணியாவது நிச்சயம்.

திட்டங்கள் செயல்பட்டும், கல்வி நிலை முன்னேறியும் வாழ்க்கைத் தரம் உயர்ந்தும் பல ஆதாயங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் காபிஎவ்வாறு சிப்பம் செய்யப்பட்டிருக்கிறது என்று கூர்ந்து கவனிக்கும் போக்கு ஏற்படுவது இயல்பு. பிரபல ஸ்தாபனம் ஒன்று வழங்கும் ஒரு பொட்டலம் காபியை ஒருவர் வாங்கினாரென்றால் அவருக்கு நியாயமான விலையில்

நல்ல தரமான பொருள் நிச்சயம் கிடைத்தாகிறது.

## முன்னேற்றப் பணிகள்

காபி போர்டால் நிறம்பட நிர் வகித்து நடத்தப்படும் புகழ்பெற்ற காதஹவுஸும், "கோஞ" மற்றும் "எஸ்ப்ரெஸ்ஸோ" காபி விற்பனை செய்யும் நாகரிகச் சிற்றுண்டி சாலை களும் காபித் துறை முன்னேற்றத் துக்கான பணியைச்செய்து வருகின் றன. இந்தியாவின் மேற்கத்திய வடக்கத்தியப் பிராந்தியங்களில் காபி பானம் அருந்தும் எண்ணத் தைப் பரப்புவதற்குப் பெருமள வில் உதவி புரிந்திருக்கிறது இது.

வட இந்தியாவிலுள்ள பலபகுதி களில் உள்ள ஓட்டல்களில் ஃபில் டரையோ அல்லது பெர்க்கொலேட் டரையோ உபயோகிக்காமல் தேயி லையைப் போலவே காபிப் பொடி யும் பாத்திரங்களில் போட்டு அப் படியே காய்ச்சிவடித்த நீரை காபி தயாரிக்கப் பயன் படுத்தப்பட்டு வந்தது. ஆகவே, இதன் பலன் அவ்வளவாகத் திருப்தி அளிப்ப தாக இருந்ததில்லை. "எஸ்ப் ரெஸ்ஸோ" மற்றும் "கோஞ" முறை காபி தயாரிப்பானது நன்ரு கவே உள்ளது. ஆனால், ஃபில்ட ரில் வடிகட்டிய டிகாக்ஷனைக் கொண்டு காபி தயாரித்து அதை உயரத்தில் தூக்கி கப்புகளில் வார்க் கும் தமிழ் நாட்டு ஓட்டல் தயா ரிப்பு முறையளவுக்கு அது சிறப் பானது என்று சொல்ல முடியாது. கடைசியாக கூறப்பட்ட தயாரிப்பு முறையானது "காபியின் 3 கஜம்" என்று அடிக்கடி குறிப்பிடப்படுவ துண்டு.

## காபி அருந்தும் இந்தியர்

இன்றைய சராசரி இந்தியர் தேநீர் மற்றும் காபி ஆகிய இரண் டையும் விரும்பி அருந்தும் கலப் படத் தன்மை உடையவராகக் காணப்படுகிருர்கள்.

## புதிய பரபரப்பு

காபி அருந்துவதில் இப்பொழுது புதியதொரு பரபரப்பு அல்லது போக்கு ஏற்பட்டிருக்கிறது. நொடி பொழுதில் காபி தயாரித்துவிடக் கூடிய 'இன்ஸ்டண்ட்' உருவில் அமைந்த காபிதான் அது. இது காட்டுத் தீயைப்போன்று பிடித்து வருகிறது. நொடிப் பொழுதில் தயாரிக்க வல்ல ஒரு டப்பா இன்ஸ் டண்ட் காபியை மட்டும் கை யோடு வைத்துக் கொண்டிருந்தா ராஞல், 'திடுதிப்'பென்று வந்து சேரும் விருந்தாளியைக் கண்டு எந்த இல்லத்தரசியும் நடுங்கவேண் டியதில்லை. நொடிப்பொழுது 'இன் ஸ்டண்ட்' தயாரிப்புகள் காலம். சிரமம்இரண்டையும் மிச்சப்படுத்து கின்றனவாதலால் அவை அதிக அளவில் பிரபலமாகிக் கொண்டு வருகின்றன. இன்ஸ்டண்ட் காப் பிக்கு மகத்தான விற்பனை வாய்ப்பு இருக்கிறது. அதோடு காபி பழக் கத்தை அதிகப் படுத்துவதற்கும் அது அருமையான சாதனமாகும்.

## பிரெஞ்ச் காபி

பிரெஞ்ச் காபி மற்ருெரு முக்கிய மானபொருள், சிக்கரியுடன் கலந்த காபி இது. இதனுடைய அலாதி

[45-ஆம் பக்கம் பார்க்க]

# காபியின் வரலாறும் கதையும்

காபிப் பழக்கம் எப்பொழுது தோன்றியது என்பது குறித்துப் பல கதைகள் வழங்கப்படுகின்றன. அவற்றில் மிகவும் பிரபலமானது, அராபிய ஆட்டிடையனை காலடியைக் குறித்த கதை. ஒரு சமயம் தனது ஆடுகள் சில புதர்ச் செடிகளின் பழங்களையும் கிளை நுனிகளையும், கடித்துத் தின்ற பிறகு ஆடியோடிக் குதிப்பதைக் காலடி கண்டான். அதற்கான காரணத்தை அறிய ஆர்வங் கொண்ட அவன், அந்தப் பழங்களைத் தானே தின்று பார்த்தான். அதைச் சாப்பிட்ட தனக்கும் புதிய தெம்பும், சக்தியும் ஏற்பட்டதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனான் அவன்.

யேமன் பாலைவனத்தில் இருந்த துறவி மடம் ஒன்றில் காலடி வேலைக்கு அமர்த்தப் பட்டிருந்தான். ஆகவே, இந்த விந்தையான நிகழ்ச்சிகளை அந்த மடத்தின் தலைவரிடத்தில் தெரிவித்தான் அவன். அவர் அந்தச் செடியின் கொட்டைகளைத் தண்ணீரிலிட்டுக் காய்ச்சி, அதன் மூலம் கிடைத்த கருப்புக் கஷாயத்தை மற்றத் துறவிகளுக்குப் பானமாக வழங்கினர். அந்தப் பானத்தை அருந்திய துறவிகள் நள்ளிரவுப் பிரார்த்தனைக்கும் கண் விழித்திருக்க முடிந்ததைக் கண்ட அவர் மிகவும் மகிழ்ச்சி கொண்டார். அந்தப் பானத்துக்கு "காவே" என்று பெயர் சூட்டப் பட்டது. ஊக்கமும் உத்வேகமும் அளிப்பது என்பதே 'காவே' என்ற சொல்லின் பொருள். இவ்வாறுதான் காபி பிறந்தது.

உலர்ந்த கொட்டைகளிலிருந்து பானம் தயாரிக்கும் பழக்கம் முதலில் அரேபியாவில் தொடங்கியது. அங்கிருந்து அண்மைக் கிழக்கு நாடுகள் மற்றும் ஆப்பிரிக்காவின் பல பகுதிகளுக்கும் பரவியது. வர்த்தகத்தைப் பரப்பும் நோக்கத்துடனும் வீரச் செயல்கள் புரியும் முனைப்புடனும் எழு கடல்களில் பயணம் செய்த பல வியாபாரிகள் 1570 ஆம் ஆண்டுக்குள்ளாக, ஐரோப்பிய மாநகரங்களில் காபிப் பழக்கத்தை ஏற்படுத்திவிட்டனர்.

பழைய ஐரோப்பிய கண்டத்தில் முகம்மதிய ஆதிக்கம் மகத்தான அளவுக்கு விரிவு பெறத் தொடங்கியதும், காபிப் பழக்கமும் பரவத் தொடங்கியது. முதலில் அது மத சம்பந்தமான சடங்குகளில் மட்டுமே உபயோகிக்கப் பட்டது. ஆனால், காலஞ் செல்லச் செல்ல அது மக்களின் பானமாக ஆகிவிட்டது.

மத்திய ஆப்பிரிக்காவின் ஆதிவாசிகள் காபியைப் பானமாக்கி அருந்தியதே இல்லையென்றும், காபிக் கொட்டையை அப்படியே அரைத்து மாவுப் பிண்டமாக்கி மிருகக் கொழுப்புடன் கலந்து, அதைப் பந்துபோல் உருட்டியே உண்டனர் என்றும் நம்பப்படுகிறது.

அரசியல் விவாதங்களுக்கும் காலாகால விஷயங்களைப் பேசுவதற்கும் பழைய காலக் காபி விடுதிகள் நிலைக்களன்களாக விளங்கின. அது போன்றே, இன்றைய இளைஞர் மரபினர்கள் 'எஸ்ப்ரெஸ்ஸோ பார்'களில் கூடி வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு விடிவு காணும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுகிறார்கள்,

காபியைப் பற்றி அறிந்திராத பல இடங்களிலுங்கூட இன்று காபிப் பழக்கம் வேகமாகப் பரவி வருகின்றது.

---

[43-ஆம் பக்கத் தொடர்ச்சி]

யான சுவையும், மணமும், சிக்கனச்சிறப்பும் அவ்வளவாக அறியப்படவில்லை; ஆனால் இதனை உபயோகிக்கும் பழக்கம் ஒரு முறை பிடித்துக் கொண்டு விட்டால் இது பெருமளவுபிரபலமாகிவிடும், இன்று காபிப் பொடி உபயோகிக்கும் பெரும்பாலான ஓட்டல்கள் தங்கள் கலவைகளில் சிக்கரியைக்கலக்கின்றனர்; காபியில் சிக்கரியைச் சேர்த்து உபயோகித்து வந்தது இதுவரையில்காபிஉபயோகிப்பைப் பாதித்து வந்தது. அதற்குக் காரணம், சிக்கரி இறக்குமதி செய்யப்பட்டு வந்ததுதான். ஆனால், இப்பொழுது இந்தியாவிலேயே சிக்கரி சாகுபடிசெய்யப்படுகின்ற காரணத்தால் இந்த நிலையும் சீர்படும்.

## வருங்காலம்

வருங்காலத்தில் காபி விற்பனைச் சந்தை பெருகிக் கொண்டேவரும். அதனுடைய சுவையையும், மணத்தையும் மிகப்பல மக்கள் விரும்பி வரவேற்கக்கூடிய இயல்பைப் பெற்று விடுவார்களாதலால் அந்த நிலைஏற்படும். அதோடு அசல் காபியைக் கொண்டும் காபியையும் சிக்கரியையும் கலந்தும் நொடிப்பொழுதில் தயாரிக்கக் கூடிய 'இன்ஸ்டண்ட் காபி' அறிமுகப்படுத்தப் பட்டிருத்தலானது இந்தியாவில் நவீன வாழ்க்கையின் ஓர் அத்தியாவசியப் பகுதியாகவே காபிப் பழக்கத்தை ஆக்கிவிடும்.

—"தினமணி"

# புதிதாக 4 அரசினர் கலைக் கல்லூரி 50 உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படும்

## பி. எஸ்ஸி. வகுப்பில் சில பாடங்களுக்குத் தமிழ் பயிற்று மொழி

*

புதிதாக 4 சர்க்கார் கலைக் கல்லூரிகளும், 50 உயர்நிலைப் பள்ளிகளும் 1969-70 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்படும்.

தனியார் துறையிலும் புதிய கலைக் கல்லூரிகள் ஏற்படும் என்றும், திட்டவட்டமாக எத்தனை என்பது ஜூலையில் தெரியுமென்றும் பல்கலைக் கழக அதிகாரிகள் கூறுகின்றனர்.

தற்போது தமிழகத்தில் 126 கலைக் கல்லூரிகளும் 2,376செகண்டரிப் பள்ளிகளும் உள்ளன.

வரும் கல்வியாண்டில் புதிதாக வைத்தியக் கல்லூரி எதுவும் ஏற்படாது, ஆனால், ஏற்கனவேயுள்ள 8 வைத்தியக் கல்லூரிகளில் 600 மாணவர்கள் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 1,125 பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டு வந்தார்கள், இனி 1,175 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இன்ஜினியரிங் கல்லூரிகளைப் பொறுத்தவரை அவற்றில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப் படமாட்டாது, தமிழகத்தில் அரசினர் இன்ஜினியரிங் கல்லூரி 7 உட்பட மொத்தம் 12 ஸ்தாபனங்கள் உள்ளன. சென்ற ஆண்டில் இவற்றில் மொத்தம் 1,738 பேர் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். இதில் அரசினர் இன்ஜினியரிங் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப் பட்டவர்கள் எண்ணிக்கை 1000.

பி. எஸ். ஸி. பட்டதாரிகளுக்காக நடத்தப்படும் 3 வருஷ இன்ஜினியரிங் வகுப்பு 1969-70லிருந்து நிறுத்தப்படும்.

இன்ஜினியரிங் கல்லூரியிலேயே வருஷந்தோறும் கூடுதலாக 120 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான ஒரு விசேஷ ஏற்பாட்டை ஆரம்பிப்பதற்கு மாநில சர்க்கார் ஒரு பிரேரணை சமர்ப்பித்திருக்கிறது. இதை மத்திய சர்க்கார் அங்கீகரிக்கவில்லை என்று தோன்றுகிறது.

### சென்னை திண்டிவனத்துக்குப் புதிய கல்லூரிகள்

புதிய அரசினர் கலைக் கல்லூரிகளில் ஒன்று சென்னை நகரிலும்,

மற்ருென்று தென்ஞர்க்காடுஜில்லா திண்டிவனத்திலும், மூன்ருவது மதுரை ஜில்லா மேலூரிலும் ஏற்படுத்தப்படும். மற்ருென்று எங்கே என்பது இன்னும் முடிவாகவில்லை.

## தமிழ் பயிற்று மொழி

பல்கலைக் கழகப் படிப்பில் எல்லாக் கட்டங்களிலும் படிப் படியாகத் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்படுத்த வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்று கல்வித்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பி.யு.ஸி. படிப்பு இலவசமாக்கப்பட்டிருப்பதால், வருகிற ஆண்டில் பி.யு.ஸி.யில் சேர முன் வருபவர்கள் எண்ணிக்கை மிக அதிகமாயிருக்குமென்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். மார்ச்சில் நடைபெற்ற எஸ். எஸ். எல். ஸி. பரீட்சையில் 2 லட்சம் பேர் எழுதியிருக்கிருர்கள். இதில் ஒரு லட்சம் பேர் தேறக்கூடும்.

இப்போதுள்ள கல்லூரிகளில் பி,யு,ஸி. வகுப்பில் மொத்தம் 65000 பேரைச் சேர்த்துக் கொள்ளமுடியும். இது போதாது என்று சர்க்கார் கருதுவதால்தான், மேலும் 4 கல்லூரிகளை ஏற்படுத்த முடிவு செய்திருக்கிறது. தவிர, ஏற்கனவேயுள்ள சில அரசாங்கக் கல்லூரிகளில் அதிக செக்ஷன்கள் ஏற்படுத்தப்படும்.

சென்ற ஆண்டில் பி. யு. ஸி.யில் நிறைய பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதால், இந்த ஆண்டு பி. ஏ., பி. எஸ். ஸி. வகுப்புகளிலும் அட்மிஷனுக்கு நெரிசல் காணப்படும் என்பது நிச்சயம்.

அரசினர் கலைக் கல்லூரிகளில் கூடுதலாக பட்டப்படிப்பு வகுப்புகளை ஆரம்பிக்கவும், ஏற்கனவே இருந்து வரும் பி.யுஸி கல்லூரிகளில் சிலவற்றில் பி. ஏ.பி.எஸ்.ஸி' வகுப்புகளை ஆரம்பிக்கவும்சர்க்கார் உத்தேசித்திருப்பதாக, கல்வி இலாகா அதிகாரி ஒருவர் கூறினுர். தனிப்பட்ட கல்லூரிகளிலும் இத்தகைய விஸ்தரிப்பு காணைப்படுமென்று சர்வகலாசாலை அதிகாரிகள் கூறுகின்றனர். ஜுலை மாதத்தில்தான் நிலைமை தெளிவாகத் தெரியும்.

## புதிய ஆரம்பப் பள்ளி இராது

தமிழகத்தில் தற்போது 32,000 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன. இனி புதிதாக ஆரம்பிப்பதற்கு இடமில்லை எனக் கருதப்படுவதால், புதிய ஆரம்பப் பள்ளிகள் எதுவும் இராது. 300க்குக் குறையாமல் ஜனத் தொகையுள்ள எல்லா இடங்களிலும் ஒரு மைல் வட்டாரத்துகுள் ஆரம்பப் பள்ளிகள் இருந்து வருகின்றன.

48·46 லட்சம் குழந்தைகள் ஏற்கனவே பள்ளிகளில் சேர்ந்து இருக்கின்றனர். 6-11 வயதுப் பிரிவிலுள்ள மொத்த குழந்தைகளில் 91·9 சதவிகிதமாகும் இது.

1969-70ஆம் ஆண்டில் 1·5லட்சம் குழந்தைகள் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்பதுசர்க்காரின் இலக்கு. கூடுதலாக 2,650

ஆசிரியர்களை நியமிக்க சர்க்கார் உத்தேசித்துள்ளது.

11-14 வயதுப் பிரிவிலுள்ள குழந்தைகள் 7 லட்சம் பேர் ஏற்கனவே பள்ளிகளில் சேர்ந்துள்ளனர். இந்தப் பிரிவிலுள்ள மொத்த எண்ணிக்கையில் 37 சதவிகிதம் இது. வருகிற ஆண்டில் கூடுதலாக 60,000 பேர் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். புதிதாக 1,500 பி.டி. ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

## தர மேம்பாட்டிலும் கவனம்

கற்பவர்களின் எண்ணிக்கை பெருகுவதுடன் மட்டுமின்றி, கல்வியின் தரமும் உயரவேண்டுமென்பதில் சர்க்கார் தீவிர சிரத்தை கொண்டிருப்பதாகவும் கல்வி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள விஞ்ஞான ஆய்வுக் கூடங்களுக்கு மானியம் அனுமதிக்க சர்க்கார் முடிவு செய்துள்ளது என்றார்.

ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக்கும் விஞ்ஞான சாதனங்களுக்காக ரூ. 40,000 வீதம் 100 பள்ளிகளுக்கு ரூ. 40,00000 மானியம் அளிக்கப்படும். 150 உயர்நிலைப் பள்ளிகளுக்கு தலா ரூ. 2,000 வீதம் நூலாக மானியம் வழங்கப்படும். ஆரம்பப் பள்ளிகளில் நவீன முறையில் ஆங்கிலம் கற்பிக்கும் திட்டம் ஒன்றை அரசாங்கம் இப்போது அமல் நடத்திவருகிறது. 8-வது வகுப்பு வரை ஆரம்பக்கல்வி பூராவுமே இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை 9, 10, 11-வது வகுப்புகளுக்கும் விஸ்தரிக்க சர்க்கார் தற்போது முயன்று வருகிறது.

---

காரியங்கள் தாமதமாக நடப்பதில்லை. நடக்கச் செய்ய வேண்டும்.

—பிரான்ஸ்

மற்றவர்களைக் கீழே தள்ளிவிட்டு நீ ஏணியில் ஏற முடியாது.

—ஆஸ்திரேலியா

பெண்கள் இருக்குமிடத்தில் பேச்சிருக்கும். வாத்துகள் இருக்குமிடத்தில் கொக்கரிப்பு இருக்கும்.

—அயர்லாந்து

திருப்பிக் கொடுக்கப்படாத கடன்கள் மன்னிக்கப்படாத பாவங்கள்.

—செக்கோஸ்லோவேகியா

சமாதானம் செல்வத்தை உண்டாக்குகிறது—செல்வம் சண்டையை உண்டாக்குகிறது.

—டென்மார்க்

*மறைந்த பாரதப் பிரதமர் நேரு அவர்களின் பெயரால் இயங்கிவரும் 'பொம்மை நூலக'த்தின் செயல்முறைகளைச் சுவைபட விவரிக்கிறது இக்கட்டுரை.*

# பொம்மை நூலகம்

— ஆர். சுப்பிரமணியன் —

❊

'நூலகம்' என்றால் நூல்களைச் சேகரித்து, மக்களுக்கு அந் நூல்களை வழங்கிவரும் பொது நூலகங்களே நம் கண் முன்னர் தோன்றும். ஆனால் இவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் நூல்களுக்குப் பதிலாகப் பொம்மைகளைச் சேகரித்து, குழந்தைகளுக்கு வழங்கி வரும் 'பொம்மைகள் நூலகம்' ஒரு விந்தையானதே! 'தீராத விளையாட்டுப் பிள்ளை' என்று கண்ணனைத் தேசியக் கவிஞர் பாரதியார் கூறுகின்றார். ஆனால் ஒவ்வொரு வீட்டிலும் பல கண்ணன்கள் இருப்பது நாம் அறிந்ததே! அவர்கள் விரும்பும் விளையாட்டுப் பொம்மைகளை ஒவ்வொருவருக்கும் வாங்கிக் கொடுப்பது என்பது எவ்வளவு செல்வம் நிறைந்தவர்களினாலும் இயலாது; ஆனால் அந்தக் குறையினை 'பொம்மைகள் நூலகம்' நீக்கி விடுகின்றது. மேலும் வாரம் ஒரு புதிய பொம்மையினைப் பெற்று மகிழும் நிலையினையும் வழங்குகின்றது.

குழந்தைகளின் மனதில் என்றும் நீங்காத இடம் பெற்ற—நேரு அவர்களின் நினைவாகச் 'சாச்சா நேரு பொம்மைகள் நூலகம்' இந்தியாவில் மட்டுமல்லாமல், ஆசியாவிலேயே முதன்மையானது என்று கூறலாம். இந்தப் பொம்மைகள் நூலகம் 1958இல் அமைக்கப்பட்ட விளையாட்டுப் பொம்மைகள் பரிவர்த்தனைக் கழகத்தால் நடத்தப்படுகிறது. இந்த மாதிரியான பொம்மைகள் நூலகங்கள் டென்மார்க் தேசத்தில் மிகுதியாக இருக்கின்றது. இந்நூலகங்களின் பிறப்பிடமே டென்மார்க்என்றால் மிகையாகாது. பொம்மைகள் நூலகம், பொம்மைகளைக் காட்சிப் பொருட்களாக மட்டும் வைக்காமல் குழந்தைகள் வீட்டிற்கு எடுத்துச் சென்று, விளையாடி விட்டுத் திருப்பிக் கொடுக்கலாம். இந்த விந்தை நூலகத்தில்—பொம்மைகள் நூலகத்தில் பதினைந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் அனைவரும் உறுப்பினராகலாம்.

இந் நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துகொண்ட ஒவ்வொரு குழந்தையும் அங்குள்ள பொம்மைகளில் தான் விரும்பும் பொம்மையை—இந் நூலகத்திலிருந்து பெற்றுச் செல்லும். பொம்மையினை ஒரு வாரம் வைத்து விளையாடி விட்டுத் திருப்பிக் கொடுத்துவிட்டு வேறு பொம்மைகளைப் பெற்றுச் செல்லலாம்.

1965-ஆம் ஆண்டு குடியரசு நாளில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பொம்மைகள் நூலகம், சிறப்பாக, நாடு போற்றும் வகையில் இயங்கி வருகின்றது. 'முன்னோடித் திட்டம்' என்ற முறையில் ஆரம்பிக்கப் பட்ட இந்த நூலகம் மாபெரும் வெற்றியினை அடைந்துள்ளது என்றால் மிகையாகாது. அண்மையில் பம்பாயில் இது போன்ற ஒரு 'பொம்மைகள் நூலகம்' நேரு அவர்களின் பெயராலேயே நிறுவியுள்ளனர் என்பது மிகுதியான மகிழ்ச்சியைக் கொடுக்கின்ற செய்தியாகும்.

இந் நூலகத்தில் உறுப்பினராக உள்ள குழந்தைகள் மிகவும் பொறுப்புடனும், ஒழுங்காகவும் பொம்மைகளைக் கண்காணித்துத் திருப்பிக்கொடுக்கின்றனர். அதுவே ஒரு வெற்றி என்று இதனை நடத்துகின்றவர்கள் நினைக்கின்றனர். இது வரையிலும் எந்தக்குழந்தை உறுப்பினரும் புதிய பொம்மைகளை நூலகத்திற்கு வாங்கிக்கொடுக்க வேண்டியதில்லை ஏற்படவில்லை, ஒரு சில பொம்மைகள் மட்டுமே பழுதடைந்துள்ளன.

குழந்தைகளுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் புதிய திட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளனர். குழந்தைகள் திருப்பிக் கொண்டு வந்து கொடுக்கும் பொம்மைகளை நூலகர் நன்றாகக் கவனிக்கின்றார். பொம்மைகள் நன்றாக வைக்கப் பட்டிருக்கின்றனவா என்பதனையும் பார்க்கின்றார். பொம்மையினை நன்றாக வைத்திருக்கும் குழந்தையின் உறுப்பினர் அட்டையில் ஒரு ரோஜா மலர் (குழந்தைகளின் மனதில் என்றும் நீங்காத இடம் கொண்ட முன்னாள் பாரதப் பிரதமர், காலம் சென்ற நேருஜி அவர்கள் விரும்பி அணியும் மலராக) பொறிக்கப்படுகிறது. ஒரு குழந்தை இவ்வாறு எட்டு மலரைப் பெறுமானால், அந்தக் குழந்தைக்கு ஒரு பொம்மை பரிசாக வழங்கப் படுகிறது.

பரிசுப் பொம்மைகள் நூலகத்தின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றிலிருந்து தனக்கு விருப்பமான பொம்மையினை தேர்வுசெய்து பெற்றுக்கொள்ளலாம். ஆனால் பொம்மைகள் நன்றாகப் பாதுகாக்கப் படாமல் திருப்பிக் கொடுக்கப் படுமானால் அதனையும் நூலகர் உறுப்பினர் அட்டையில் பதிவு செய்கிறார். இவ்வாறு இருமுறை குறிக்கப்படுமானால் அந்தக் குழந்தை உறுப்பினர், உறுப்பினர் தகுதியை இழந்துவிட வேண்டும்; ஆனால் இதுநாள் வரையிலும் அந்த ஒரு இக்கட்டான நிலை ஏற்படவில்லை என்பது மகிழ்ச்சியினைக் கொடுக்கும் செய்தியாகும். இந்தியக் குடிமகன் ஒருவன் தன் குழந்தைக்கு வாரம் ஒருபொம்மையினை வாங்கிக்கொடுக்க இயலுமா? முடியாது. ஆனால் இந்தப் பொம்மைகள் நூலகம் அதற்குத் துணை புரிகின்றது.

ஐரோப்பாவில் உள்ள டென்மார்க்கைச் சேர்ந்த குழந்தைகள் சங்கம் முதலில் இந் நூலகத்திற்கு 400 பொம்மைகளை அன்பளிப்பாக

வழங்கியது. இப்பொழுது இங்கு 1000-க்கும் மேற்பட்ட பொம்மைகள் உள்ளன. இன்று இந்நூலகத்தில் 200-க்கும் மேற்பட்ட குழந்தை உறுப்பினர் இருக்கின்றனர். இந்த மாதிரியான நூலகங்கள் நாடெங்கும் தோன்றும் நாள் எந்நாளோ ?

—"புத்தக நண்பன்"

---

# உட்ரோ வில்ஸன் பொன்மொழிகள்

**ஒளி**

உரிமையின் வரலாறு என்ன ? அரசாங்க அதிகாரத்தை வளர்த்த கதை அல்ல. குறைத்த கதையே அது.

ஒளி வேண்டும் ; சூடு வேண்டாம்.

**மனம்**

ஒரே நோக்குடைய மனந்தான், எனக்கு.

**நாடுகள்**

வேறு ஒரு நாட்டைப் பற்றித் தீர்ப்புக் கூற எந்த நாட்டுக்கும் தகுதி இல்லை.

**அமைதி**

வெற்றி முழக்கம் இல்லாமல் அமைதியாக இருக்க வேண்டும்

**அரசியல்**

வரை கடந்து போகிறவன் "தீவிரவாதி" ; செல்ல வேண்டிய அளவு செல்லாதவன் "பழமைவாதி'!; நகரமாட்டாதவன் "பிற்போக்குவாதி".

**உண்மை**

உலகிலுள்ள எல்லாவற்றிலும் மிகுந்த வலிமையுடையது, அழிக்க முடியாதது, அசைக்க முடியாதது எது ? உண்மை.

அரசாங்கத்தை மக்கள் கண் காணிக்கும் இடத்தில்தான் சுதந்திரம் வாழும்.

# செய்திக் கொத்து

## ஆசிரியர்கள் க்ஷேம நிதி திட்டம் பரிசீலனையில் உள்ளது

### *மேல் சபையில் கல்வி அமைச்சர் தகவல்*

மேல் சபையில் இன்று தனியார் தீர்மானங்கள் ஆலோசனைக்கு வந்தன.

எல்லாத் துறைகளிலுமுள்ள பலதரப்பட்ட ஆசிரியர்களுக்கும் ஒவ்வொரு கல்வி ஆண்டின் இறுதியிலும் அந்த ஆண்டில் அவர்கள் வாங்கிய மொத்த சம்பளத்தில் 25 சதவிகிதம் பூரிப் பூதியமாக (போனஸ்) வழங்கப்பட வேண்டுமென்று ஆசிரியர் பிரதிநிதியான திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி தீர்மானமொன்றைக் கொண்டு வந்தார்.

கல்வி அமைச்சர் திரு எஸ். மாதவன் பதிலளிக்கையில், தீர்மானத்தின் அடிப்படைக் கருத்தை அரசு ஏற்றுக்கொள்வதுடன், பாராட்டவும் செய்கிறது என்றார்.

ஆசிரியர் க்ஷேமநல நிதி என்பதாக ஒரு நிதியைத் துவக்கி அதில் ராஜ்ய சர்க்கார், மத்திய சர்க்கார், மாணவர்கள் சார்பில் பெற்றோர்கள் ஆகிய மூவர்களும் அன்பளிப்பு செய்து, அத்தகைய நிதியிலிருந்து ஆசிரியர்களுக்கு உதவும் திட்டம் குறித்து அரசாங்கமே பரிசிலித்து வருவதாகவும் கூறினர். மந்திரி கேட்டுக்கொண்டதன் பேரில் தீர்மானம் வாபஸ் பெறப்பட்டது.

## ஆசிரியர் பணி, உரிமைகள்

தனியார் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், இதர ஊழியர்களுக்கும், அரசு ஊழியர்களுக்குரிய பதவி பாதுகாப்புச் சட்டம் இயற்ற வேண்டும் என்று மற்றொரு ஆசிரியர் பிரதிநிதி எம். சங்கரலிங்கம் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். சர்க்கார் உத்தரவுகளை சில தனியார் பள்ளி நிர்வாகிகள் மதிப்பதே இல்லை என்பது அவர் புகார். இந்த நிலையை மாற்ற இயலாமல் போனால் கல்விச் சாலைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்வதுதான் சிறந்த வழி என்று அவர் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சர் திரு எஸ். மாதவன் பதிலளிக்கையில், கல்விச் சாலைகளை தேசிய மயமாக்க வேண்டும் என்ற கொள்கையை சர்க்கார் ஆதரிக்க வில்லை என்றார். சில தனியார் பள்ளிகள், கல்லூரிகள், கல்விப் பணிக்கென்றே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட திருச்சபைகள் ஆகியவைகள் நடத்தும் கல்விப் பணிகளின் தரம், அரசாங்கத் துறையை விட மிகச் சிறந்திருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

உதவி பெறும் தனியார் ஆரம்ப நிலைப் பள்ளிகளின் நிர்வாகத்தை மாத்திரம்—ஒழுங்குமுறை தவறி

கூடக்கும் பட்சத்தில்-அரசாங்கமே எடுத்து நடத்துவது குறித்து பரிசீலிக்கும்படி அரசாங்க சட்ட இலாகாவைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும், ஆசிரியர்களின் நியாயமான உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து ஆராய்ந்து ஆலோசனைகளைக் கூறும்படி அரசு சீக்கிரமே ஒரு குழுவை நியமிக்க விரும்புகிறதென்றும், அப்போது அதற்கேற்றவாறு இப்போதுள்ள சட்டங்களில் தகுந்த மாற்றங்கள், திருத்தங்கள் செய்யப்படுமென்றும் உறுதி கூறினர்.

இந்த வாக்குறுதியை யடுத்து, தீர்மானம் வாபஸ் பெறப்பட்டது.

## தனியார் பள்ளி ஆசிரியர் ஊழியர் வேலை நிலையை ஆராயக் கமிட்டி ஏற்படும். ஆசிரியர் கில்டு மாநாட்டில் அமைச்சர் மாதவன் தகவல்

சென்னை, மார்ச். 22—தனியார் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கும், இதர ஊழியர்களுக்கும் வேலைபாதுகாப்பு அமைப்பதற்கான வழி வகைகளைக்கூறும் பொருட்டு கமிட்டியொன்றை சர்க்கார் விரைவில் அமைக்கும் என்று கல்வி மந்திரி திரு எஸ். மாதவன் இன்று தெரிவித்தார்.

சென்னை ஆசிரியர் கில்டு 73வது கல்வி மகாநாட்டில் அவர் உரை நிகழ்த்தினர். தனியார் நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் வேலை பார்ப்பவர்களின் வேலை நிலைமை மோசமாக இருப்பதாகக் கூறப்படும் புகாரை முழுமையாக ஒப்புக் கொள்வதற்கில்லை. சில நிர்வாகங்கள் விதிகளை மீறுகின்றன. இதனால் ஊழியர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே ஊழியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு கமிட்டியொன்றை நியமிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆசிரியர்களின் வாழ்க்கை நிலை அபிவிருத்திக்கு சர்க்கார் உதவியைத் திரு. மாதவன் உறுதி கூறினர். ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் நன்கொடைகளை வசூலித்து ஆசிரியர் நிதியொன்றை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் கருதினர். இதற்காக மத்திய சர்க்காரிடம் தாம் உதவி கோரப் போவதாகக் கூறினர்.

மாணவர்களிடையே கட்டுப்பாட்டை நிலவச் செய்வதற்கும் கல்வித்தரத்தை அபிவிருத்தி செய்வதற்கும் தகுந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் பொருட்டு திட்டமொன்றை ஆசிரியர்களும் உருவாக்க வேண்டும் என அமைச்சர் கருதினர்.

சம்பள விகிதங்களை உயர்த்த சம்பளக் கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்று மகாநாடு கோரியது. கட்டுப்பாட்டை நிலவச் செய்யவும், கல்வித்துறைகளில் முன்னேற்றம் காணவும் கல்வி ஸ்தாபனங்களில் தகுந்த

சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கான, வழிவகைகளைக் காணும் பொருட்டு கமிட்டியொன்றை நியமிக்க வேண்டும் என்றும் மகாநாடு யோசனை தெரிவித்தது.

ஆங்கிலம், தமிழ்ப் பாடப் புத்தகங்களை வெளியிடும் விஷயங்களில் சர்க்காருக்கு ஆலோசனை கூறுவதற்காக ஆசிரியர்கள் குழு ஒன்றை அமைப்பதை மகாநாடு ஆதரித்தது,

கோத்தாரி கமிஷன் சிபாரிசுகளை விரைவில் அமுலாக்குமாறு வற்புறுத்தியும், வைத்திய இதர வசதிகளை தனியார் நிர்வாகத்தின் கீழ் உள்ளவர்களுக்கும் விஸ்தரிக்குமாறு கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மாணவர்களைக் கல்லூரியில் சேர்க்க பல்கலைக் கழகம் தெரிவிக்கும் முறை

திருச்சி, மார்ச் 24—மாணவர்கள் சிரமப்படுவதைத் தவிர்ப்பதற்காக, வரும் கல்வியாண்டிலிருந்து மாணவர்களைச் சேர்ப்பதற்கு மனுக்களைக் கொடுக்க கீழ்க்கண்ட முறையை மேற்கொள்ளுமாறு கல்லூரிகளிடம் சென்னைப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

மனுவைக் கொடுக்க தபால் கட்டணம் உட்பட அதிகபட்சம் ஒரு ரூபாய் வசூலிக்கலாம். மனு பதிவு செய்யப்படும்போது அத்துடன் ஒரு ரூபாய் அனுப்பப்பட வேண்டும். மாணவர் தேர்வு செய்யப்பட்டதும் கூடுதலாக இரண்டு ரூபாய் கட்டணம் வசூலிக்கலாம்.

மனு கேட்கும் ஒவ்வொரு மாணவருக்கும் அதை வழங்க வேண்டும். பதிவு செய்யக்கோரும் ஒவ்வொரு மாணவரையும் பதிவு செய்ய வேண்டும். குறிப்பாக பிற்பட்ட, ஷெட்யூல் வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் மனுச் செய்ய வாய்ப்பை மறுக்கலாகாது,

மாணவர்களைத் தெரிவு செய்வதில் பிரின்ஸிபாலும், இரண்டு முதிய ஆசிரியர்களும் பொறுப்பு வகிக்க வேண்டும். திறமை அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும். விளையாட்டு, பிற நடவடிக்கைகள் முதலியவற்றையும் கவனிக்க வேண்டும்.

அநாவசிய இரட்டிப்பையும், சிரமத்தையும் தவிர்க்க பிராந்தியத்திலுள்ள பல்வேறு கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு பி.ஏ., பி.எஸ்.ஸி., மாணவர்களின் மனுக்களையாவது திரட்டி பரிசீலிக்கலாமா என்பது பற்றி ஆராய சிறிது காலத்துக்கு முன்பு ஒரு குழுவை பல்கலைக் கழகம் அமைத்தது. எல்லாக் கல்லூரிகளுக்கும் பொருந்தும் திட்டத்தை உருவாக்குவது சிரமம் என கமிட்டி கருதியது. ஆகவே மேற்கண்ட முறையை அது சிபாரிசு செய்துள்ளது.

## தமிழ்ப் பண்டிதர்கள் பெயர் "புலவர்கள்" என்று மாறும்

திருச்சி, மார்ச், 23—சர்வ கலாசாலை தமிழ்ப் பண்டிதர்கள் பரீட்சையில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு இது வரையில் 'வித்வான்' என்ற பட்டம் கொடுக்கப்பட்டு வந்தது. இனி, அதைப் புலவர் என்று மாற்றுவதற்குச் சென்னை சர்வகலாசாலை சம்மதித்திருப்பதாக கல்வி இலாகா மந்திரி திரு. எஸ். மாதவன் இன்று கூறினர். இது சம்பந்தமான உத்தரவுகள் சீக்கிரத்தில் பிறப்பிக்கப்படும் என்று கூறினர்.

## பள்ளிகளில் தேர்வுக்குப் புது திட்டம்

### அரசு பரிசீலனை

சென்னை, மார்ச். 25—ஆண்டுக்கு ஒரு முறை தேர்வு நடத்தி மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதை விட ஆண்டு முழுவதும் மாணவன் பெறுகின்ற மதிப்பெண்களை வைத்துத் தேர்வு செய்யலாமா என்பதைப் பற்றிப் பல்கலைக் கழகம் ஆராய்ந்து வருவதாகவும், இத் திட்டத்தைப் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொள்வதை யொட்டி அரசாங்கமும் ஏற்றுக் கொண்டு உயர்நிலைப் பள்ளிகளில் இத்திட்டத்தை அமுலாக்க உத்தேசித்துள்ளது என்றும் கல்வி மந்திரி திரு. எஸ். மாதவன் இன்று மேல் சபையில் கேள்வி நேரத்தின் போது கூறினர்.


**"ஆரம்பக் கல்வி"**
**ஆபீஸ்.**
**94–95, புதுத்தெரு,**
**மண்ணடி, சென்னை-1.**

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2–00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்தியேகம்

***முக்கிய அறிவிப்பு***

Book Post-ல் பாரங்களை அனுப்பத் தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

இத்திட்டத்தின்படி மாணவர்கள் வழங்கும் ஒவ்வொரு காலாண்டுத் தேர்வுமதிப்பெண்கள் கணக்கிடப்படும் என்று கூறினர். இதில் மாணவர்களின் நற்சான்று கவனிக்கப்படுமா என்பது பற்றித் தமக்குத் தகவல் தெரியாது என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் மந்திரி கூறினர்.

## சம்பளத்துடன் கிராக்கிப்படி இணைப்பு: அரசு பரிசீலனை

மத்திய அரசு ஊழியர்களுக்கு அளித்திருப்பது போல் தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கிராக்கிப்படியை இணைப்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்து வருகிறது என்று நிதி மந்திரி திரு கே. ஏ. மதியழகன் இன்று சட்டசபையில் கேள்வி நேரத்தின்போது கூறினர்.

செக்ரடரியேட் ஊழியர் சங்கத்திலிருந்து இது சம்பந்தமாக முறையீடு வந்திருக்கிறது என்றும் திரு. மதியழகன் கூறினர். ஆயினும் கிராக்கிப்படியை சம்பளத்துடன் இணைப்பதால் ஏற்படும் சாதகபாதகங்கள் பற்றி ஆராயப்பட்டு வருகிறது என்றும், சில விஷயங்களில் இந்த இணைப்பினுல் பாதகம் ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னர். விலைவாசியைப் பொறுத்துகிராக்கிப்படி தரப்படுவதால் சம்பளத்துடன் படியை இணைப்பதன் மூலம் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாமற் போய்விடும் என்றும் மந்திரி கூறினர்.

செக்ரடேரியட்டில் உள்ள என் ஜி. ஓக்கள் வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது என்று சட்டசபையில் முதலமைச்சர் திரு. மு. கருணுநிதி ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

பைல்கள் துரிதமாக பைசல் செய்யப்பட வேண்டிய நிலையிருப்பதால் ஐந்து நாட்களே வேலை நாட்கள் என்று ஆக்குவதன் மூலம் பைல்கள் தேங்கிவிடக் கூடாது என்பதற்காக அரசாங்கம் மிகுந்தஜாக்கிரதையுடன் இதுபற்றி பரிசீலித்து வருகிறது என்றும் திரு. கருணுநிதி கூறினர்.

## பஞ்சாயத்து யூனியன்கள் நிதி பற்றி ஆராயக் கமிட்டி

### *அவை நடத்தும் பள்ளிகளின் ஆசிரியர்கள், சம்பளப் பட்டுவாடா பற்றி உறுதி*

கல்வித் துறைக்குச் செலவிடுவதற்குப் போதிய பண வசதி இல்லாமல் இருக்கும் பஞ்சாயத்து யூனியன்களின் நிலையை ஆராய்ந்து

நிதி நிலையைச் சீர்படுத்துவதற்காக உயர் அதிகாரக்கமிட்டி அமைப்பது என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதாக ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு மா. முத்துசாமி இன்று சட்டசபையில் அறிவித்தார்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், பொதுப்பணிகள், கதர் ஆகிய இலாக்காக்களுக்கான மான்யக் கோரிக்கை மீது சட்டசபையில் நடைபெற்ற விவாதங்களுக்குப் பதிலளித்து மந்திரி திரு முத்துசாமி பேசுகையில், இந்த உயர் அதிகாரக்கமிட்டி மூன்று மாதங்களில் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று கூறினர். அவர் கூறியதாவது :—

கல்விக்காகச் செலவில் 85 சதவீதத்தை சர்க்கார் ஏற்றுக் கொள்கிறது. 15 சதவீதம் தான் ஸ்தல ஸ்தாபனங்களும், பஞ்சாயத்து யூனியன்களும் கொடுக்கின்றன. பல பஞ்சாயத்து யூனியன்கள் அதையும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் பஞ்சாயத்து யூனியன்கள் கல்வித் துறைக்குச் செலவிடப் பணமின்றி பற்றுக்குறையாக இருப்பதால், உடனடியாக முழுக் கல்வி மான்யத்தையும் அவர்களுக்குக் கொடுக்கும்படி உத்திரவிடப் பட்டிருக்கிறது. பற்றுக்குறையாக உள்ள பஞ்சாயத்துக்களின் நிதி நிலையை ஆராய்ந்து நிரந்தர பரிகாரம் செய்து நிதி நிலையைச் சீர்படுத்த உயர் அதிகாரி கமிட்டி ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு முதல் தேதியே சம்பளம் கிடைக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கப்படும். கல்விக்காகக் கொடுக்கப்பட்ட மான்யத்தை மற்ற காரியங்களுக்குப் பஞ்சாயத்து யூனியன்கள் பயன்படுத்தக்கூடாது என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. கல்வி இலாகாவின் அங்கீகாரம் பெருத பள்ளிக்கு அரசாங்கம் மான்யம் கொடுப்பதில்லை யாதலால் இனி பஞ்சாயத்துக்கள் கல்வி இலாகாவிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பின்தான் பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டும். கல்வி இலாகாவின் அங்கீகாரம் பெருமல் பள்ளிகளை ஆரம்பிக்க பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அனுமதிக்கப்படமாட்டா. பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆசிரியர் தொகை நிர்ணயிக்கப்படும்.

நிதி நிலையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு பஞ்சாயத்துக்களும் நகரசபைகளும், அரசாங்க கஜானுவில் டெபாசிட் செய்யும் தொகைக்கு 4·5 சதவீதம் வட்டி கொடுப்பதென சர்க்கார் முடிவு செய்துள்ளது. இதன் மூலம் அவைகளுக்கு ரூ. 1·2 கோடி அதிக வருமானம் கிடைக்கும் ''.

—'' தினமணி''

# நீவிர் அறிவீரா?

## அறிஞர் அண்ணுதுரை முயற்சியால் கோவா வீரர் ரானடே விடுதலை

கோவா சுதந்திர வீரர் ரானடேயின் விடுதலைக்கு, போப் பாண்டவர் மூலம் அறிஞர் அண்ணுதுரை உதவியிருக்கிருர்.

இந்த விஷயத்தைத் திரு. ரானடேயே இன்று நிருபர்களிடம் தெரிவித்தார்.

போர்ச்சுகல் சிறைகளில் வாழும் இந்தியரின் விடுதலைக்காகப் பாடுபடும் கமிட்டி போப்பாண்டவரிடம் செல்லுமாறு திரு. அண்ணுதுரையைக் கேட்டுக் கொண்டது. அவ்வாறே திரு அண்ணுதுரை போப் பாண்டவரைக் கேட்டுக் கொண்டார். போப்பாண்டவரும் ஒப்புக் கொண்டு ரானடேயை விடுதலை செய்யுமாறு போர்ச்சுகீசிய சர்க்காருக்கு எழுதினுர்.

## எச்சில் டிக்கெட் வேண்டாம் : கண்டக்டர்களுக்கு அரசு தாக்கீது

பிரயாணிகளுக்கு டிக்கெட்டுகளைக் கிழித்துக் கொடுக்கும்போது நாக்கில் விரலைத் தொட்டு ஈரப் படுத்திக் கொள்ள வேண்டாமென்று சர்க்கார் பஸ் கண்டக்டர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். இப்பழக்கம் குறித்து பிரயாணிகளிடமிருந்து புகார்கள் வந்ததைத் தொடர்ந்து இத்தாக்கீது விடுக்கப்பட்டுள்ளது.

விசேஷ வகுப்புகள் நடத்தப் படுவதாகவும், சுகாதாரம் காரணமாக இத்தகைய பழக்கத்தில் ஈடுபடாதிருக்குமாறும் அவ்வகுப்புகளில் கண்டக்டர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் பஸ் போக்குவரத்து அதிகாரி ஒருவர் கூறினுர்.

## அங்குத் தேன் ஊறுது !

கிழக்கு ஜெர்மனியில் சராசரியாக ஒரு தேனீ வருடத்திற்கு 9 கிலோ கிராம் தேன் தருகிறது. தேனீ வளர்ப்பதன் மூலமாகக் கிழக்கு ஜெர்மன் சர்க்காருக்கு வருடத்திற்கு ரூ. 27.50 கோடி வருமானம் கிடைக்கிறது.

ஆகவே கிழக்கு ஜெர்மனியில் தேனீக்கள் அரசாங்கத்திற்கு நல்ல வருமான வாய்ப்பை அளிக்கின்றன, இது இனிப்பான வருமானமாகும்,

ஆனுல் நமது நாட்டிலோ இதே அளவுக்குச் சமமான வருமானத்தை நமது உதவிப் பிரதமர் மொரார்ஜி தேசாய் சர்க்கரைக்கும் நாட்டுச் சர்க்கரைக்கும் உபரி வரி விதிப்பதன் மூலமாக எதிர்பார்க்கிருர்.

சர்க்கரை மூலமாக நமது அரசாங்கத்திற்குக் கிடைக்கும் இந்த வருமானம் மக்களுக்கு இனிப்பாக இருக்காது.

கிழக்கு ஜெர்மனியில் சென்ற வருடத்தில் தேன் உற்பத்தி 4680 டன் என்பது குறிப்பிடத்தக்கது,

Phone : 24544 Post Box No. 1818

Association Publishing House

'ஆரம்பக் கல்வி' நிலையம்

94/95, New Street, Mannady, Madras-1.

ஆரம்பப் பள்ளிகளுக்குரிய
எமது பாடப் புத்தகங்கள்

இரண்டாம் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·50 | — | — |
| சிறுவர் பூகோளம் | 0·60 | — | — |
| சிறுவர் கணக்கு நூல் | 0·75 | — | — |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·40 | — | — |

மூன்றும் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·60 | — | — |
| சிறுவர் பூகோளம் | 0·60 | — | — |
| சிறுவர் கணக்கு நூல் | 0·87 | 37 | 18—5—66 |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·50 | — | — |

(3-வது பூகோளம் ஜில்லாவாரியாக
வெளியிட்டிருக்கிறோம்.)

### நான்காம் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 0·87 | 11 | 18—5—66 |
| சிறுவர் பூகோளம் | 0·62 | 18 | 19—5—66 |
| சிறுவர் கணக்கு நூல் | 1·25 | 3 | 24—5—67 |
| இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும் | 0·75 | 6 | 18—5—66 |

(4-வது பூகோளம், சரித்திரம் ஜில்லாவாரியாக வெளியிட்டிருக்கிறோம்.)

### ஐந்தாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| சிறுவர் வரலாறு | 1·00 | 42 | 18—5—66 |
| சிறுவர் பூகோளம் | 1·00 | 19 | 18—5—66 |
| சிறுவர் கணக்கு நூல் | 1·50 | 4 | 17—5—67 |
| சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம் | 1·25 | 9 | 18—5—66 |

## உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்குரிய எமது பாடப் புத்தகங்கள்

### ஆறும் வகுப்பு

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| மாணவர் வரலாறு | 1·00 | 54 | 18—5—66 |
| புதுமுறை நில நூல் | 2·00 | 13 | 24—4—68 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| புதுமுறை சங்கக் கணிதம் | 1·50 | 50 | 18—5—66 |
| பொது விஞ்ஞானம் | 1·25 | 25 | 18—5—66 |
| அறிவுச்சுடர் (தமிழ் துணைப்பாட நூல்) | 0·62 | 22 | 18—5—66 |
| Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்) | 0·50 | 49 | 18—5—66 |

ஏழாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| புதுமுறை வரலாறு | 1·50 | 18 | 17—5—67 |
| புதுமுறை நில நூல் | 1·50 | 4 | 24—5—67 |
| புதுமுறை சங்கக் கணிதம் | 1·75 | 4 | 24—5—67 |
| பொது விஞ்ஞானம் | 1·50 | 15 | 17—5—67 |
| மேனாட்டு இளைஞர் (தமிழ்த் துணைப்பாட நூல்) | 1·00 | 7 | 17—5—67 |
| Mother India Supplementary Reader (ஆங்கிலத் துணைப்பாட நூல்) | 0·60 | 9 | 17—5—67 |

எட்டாம் வகுப்பு

| | | | |
|---|---|---|---|
| புதுமுறை வரலாறு | 1·80 | 36 | 17—5—67 |
| புதுமுறை நில நூல் | 1·80 | 40 | 17—5—67 |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| புதுமுறை சங்கக் கணிதம் | *2·00* | *4* | *24—5—67* |
| பொது விஞ்ஞானம் | *2·00* | *4* | *24—5—67* |
| நம் நாட்டு இளைஞர் தமிழ்த் துணைப்பாட நூல் | *1·00* | *7* | *24—4—68* |

## கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர் : லீலா. பார்த்தசாரதி, பி.ஏ., எல்.டி.,

| | | |
|---|---|---|
| *2·00* | *2* | *5-7-'61* |

(ஆசிரியர்களுக்குத் தக்க கமிஷன் உண்டு.)

**Association English Primer III Class** *0·60*
**Association English guide IV Class** *0·40*
**Association English guide V Class** *0·50*

## புதுமுறை சங்க வாய்பாடு

*100 பிரதிகள்* *9·00*

# HIGH SCHOOLS

உயர்நிலைப் பள்ளிகளுக்கு

## GENERAL SCIENCE

பொது விஞ்ஞானம்

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

| | | | |
|---|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு | *1·75* | *33* | *18-5-'66* |

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·00 | 56 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·80 | 23 | 24-4-'68 |

## MATHEMATICS

### புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் : **பி. வி. நாகராஜன்,** பி.ஏ., எல்.டி..

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·50 | 6 | 24-5-'67 |

### புதுமுறை நிலநூல்

ஆசிரியர் : **R. பத்மநாபன்,** எம்.ஏ., பி.டி.,

| | | | |
|---|---|---|---|
| *ஒன்பதாம் வகுப்பு | 2·00 | — | — |
| பத்தாம் வகுப்பு | 2·50 | 60 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 3·00 | 28 | 24-4-'68 |

### புதுமுறை வரலாறு

ஆசிரியர் : **வி. எஸ். இராகவன்,** பி.ஏ., பி.டி.,

| | | | |
|---|---|---|---|
| *ஒன்பதாம் வகுப்பு | 2·00 | — | — |
| பத்தாம் வகுப்பு | 2·00 | 59 | 17-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·50 | 24 | 24-4-'68 |

### திரு. வி. க. செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர்கள் : **த. சே. உமாபதி,** எம்.ஏ., எல்.டி.,
புலவர் **தணிகை உலகநாதன்**

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 2·25 | 45 | 17-5-'67 |

---

(*அங்கீகாரமான தேதி பிறகு அறிவிக்கப்படும்.)

# TAMIL GRAMMER

## இலக்கணம், கட்டுரை, மொழிப் பயிற்சி

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனுர்

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| *ஒன்பதாம் வகுப்பு | 2·00 | — | — |
| பத்தாம் வகுப்பு | 2·00 | 5 | 24-5-'67 |
| பதினோராம் வகுப்பு | 2·00 | 20 | 25-4-'68 |

## தமிழ்த் துணைப்பாட நூல்

### உரிமைக் குரல்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

| | | | |
|---|---|---|---|
| *ஒன்பதாம் வகுப்பு | 1·25 | — | — |

### மருத்துவ மேதைகள்

ஆசிரியர் : வித்துவான் வே. வேதாசலம்

பதிப்பாசிரியர் : புலவர். தணிகை உலகநாதன்

| | | | |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | 1·25 | 49 | 17-5-'67 |

### உமாபதி உரை நூல்

| | | | |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0·45 | — | — |
| நான்காம் வகுப்பு | 0·55 | — | — |
| ஐந்தாம் வகுப்பு | 0·65 | — | — |
| ஆறும் வகுப்பு | 1·00 | — | — |
| ஏழாம் வகுப்பு | 1·25 | — | — |


## அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்,

(ஆரம்பக்கல்வி நிலையம்)

94/95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.


(*அங்கீகாரமான தேதி பிறகு அறிவிக்கப்படும்.)


Edited, Printed and Published by P. VEERARAGHAVAN,
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.